# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 53
விலை ரூபாய் 20.00

தீபம்-53 | கார்த்திகை இதழ் - 2018,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**நேர்மையாளருக்காக ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது (உரோமையர் 5: 7)**


## திருகோணமலை மறைமாவட்டத்தில் புனித ஜோசேப் வாஸ் அடிகளாரின் சிலுவை













கல்கமுவ என்னும் இடத்தில் இருந்து இலங்கை முழுவதும் கொண்டு செல்லப்பட்ட புனித ஜோசேப் வாசின் திருச்சிலுவையானது எமது மறைமாவட்டத்தில் ஐப்பசி மாதம் 16ம் திகதி மதியம் 12 மணியளவில் எமது மறைமாவட்ட குருமுதல்வர் மற்றும் அருட்பணியாளர்களால் வெருகல் என்னும் இடத்தில் மட்டக்களப்பு மறைமாவட்டத்திடமிருந்து கையேற்கப்பட்டது.

பின்னர் இத்திருச்சிலுவை எல்லாப் பங்குகளுக்கும், கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு அதற்குரிய வழிபாடுகளும் இடம்பெற்றது.

இத்திருச்சிலுவையைத் தரிசிக்க எல்லாப் பங்குகளிலிருந்தும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். அதுமட்டுமல்லாது தமது பங்களிப்பை சிறந்த முறையில் செய்து திருச்சிலுவைக்கு தமது மகிமையை அளித்தனர் என்பது கண்கூடாக காணக் கூடியதாயிருந்தது.

கடந்த மூன்று நாட்களாக எமது மறைமாவட்டத்தில் வைக்கப்பட்டிருந்த இத்திருச்சிலுவையை 18ம் திகதி மதியம் 12. 30 மணியளவில் தென்னமரவாடி எனும் இடத்தில் வைத்து யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

**"புனித ஜோசேப் வாசே உமது பரிந்துரை எப்போதும்
எம் தாய்த் திருநாட்டிற்கு கிடைப்பதாக"**

## அன்புச் சகோதரர் சபையின் இலங்கைக்கான புதிய பிராந்திய தலைவர்



பெல்ஜியம் நாட்டின் வின்சன்ட் டி போல் என அழைக்கப்படும் தந்தை ஜோசப் ரீஸ்ற் அவர்களால் 1807ல் ஸ்தாபிக்கப்பட்டு இன்று உலகெங்கும் 28 நாடுகளில் இறைபணியாற்றிவரும் அன்புச் சகோதரர் சபையின் புதிய உலகத்தலைவரையும், அனைத்து நாடுகளின் பிராந்திய தலைவர்களையும் தெரிவு செய்யும் மேலவை உறுப்பினர்களுக்கான செயலமர்வு அண்மை யில் உரோமாபுரியிலுள்ள அன்புச் சகோதரர்களின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதில் இலங்கைக்கான தலைவராக அருட்சகோதரர் கிறிஸ்துராஜன் அந்தனி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மன்னார் புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலய பங்கின் திரு. திருமதி அந்தனி அந்தோனியா தம்பதிகளின் புதல்வராவர். இவரின் சகோதரியான அருட்சகோதரி ஜசிந்தா அந்தனி திருக்குடும்ப கன்னியர் சபையில் இறைபணியாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்புச்சகோதரர் சபையின் ஆசியத்தலைவரின் இலங்கைக்கான பிரதிநிதியாக 2018ல் நியமனம் பெற்று கடந்த 3 ஆண்டுகளாக பணியாற்றிய இவர் திருகோணமலை புனித வளனார் தொழில் நுட்பக்கல்லூரியின் அதிபராகவும், இலங்கை தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். உரோமாபுரி பாப்பிறை பல்கலைக்கழகத்தில் (Pontifical Lataran University) திருச்சபையின் சமூக கோட்பாடுகள் பட்டப்படிப்பை மேற்கொண்டு இளமானிப்பட்டம் பெற்றுள்ளார். சிறந்த தொழில்நுட்பவியலாளரான இவர் இலகு இரக கைத்தொழில் இயந்திரங்களை வடிவமைத்து உற்பத்தி செய்வதில் வல்லவராக திகழ்கின்றார்.

யாரும் இலகுவில் எதிர்கொள்ள முடியாத வேதனைகள் நிறைந்த சவால்களை கடந்து சபை மேலாளராக, அதிபராக, விரிவுரையாளராக, தொழில் நுட்பவியலாளராக பல்துறைகளில் பரிணாமம் பெற்று விளங்கும் இவரின் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**அருட்சகோதரர் லோரன்ஸ்**
**அன்புச் சகோதரர் சபை**

## 100 வது வயது அருட்சகோதரி பேணடீன்



கடந்த 04.10.2018 இலங்கை வாழ் ஷெவனோவின் சிலுவையின் கன்னியருக்கு ஒரு மகிழ்ச்சியான நாள், நன்நாள், பொன்நாள். காரணம், அன்றைய தினம் எமது சபை அருட்சகோதரியான பேணடீன் தம்புசாமி தனது 100வது பிறந்த நாளை மிகவும் சிறப்பாக கொண்டாடினார்.

இந்த பிறந்த நாளையொட்டி 06.10.2018 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு எமது சபை இலங்கை பிராந்தியத் தலைவி அருட்சகோதரி பியஸ்ரீமா பீரீசின் ஏற்பாட்டில் எமது சபை அருட்சகோதரிகளின் பங்குபற்றுதலோடு உலகெங்கும் பணியாற்றும் எமது சபை அருட்சகோதரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஓர் நன்றித் திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில், அருட்பணி இக்னேஷியஸ் (அவுஸ்திரேலியா அருட்சகோதரி பேணடீனின் சகோதரர்) அருட்பணி லூவிஸ் ஆகியோரும் இணைந்து மேற்படி அருட்சகோதரி வசிக்கும் சிலுவையின் கன்னியர் சபை, "குளோடின் இல்லம்" அம்மந்தொழுவ, சீதுவையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

தொடர்ச்சி 06ம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர் ( சா. ஞா 3:9)**

# செபமாலை: புதிய அமைப்பு முறை

### தொடக்கச் செபம்

முதல்வர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல். : ஆமென்.

எல். : எல்லா நன்மைகளும் நிறைந்த அன்பு இறைவா, கெட்ட மனிதரும், நன்றி இல்லாத பாவிகளுமாய் இருக்கிற நாங்கள், அளவில்லாத மாட்சி கொண்டிருக்கிற உம்முடைய திருச்சந்நிதியிலே இருந்து செபம் செய்யத் தகுதி அற்றவர்களாய் இருந்தாலும், உம்முடைய அளவில்லாத இரக்கத்தை நம்பிக்கொண்டு, உமது மாட்சிக்காகவும், அன்னை மரியாவின் புகழ்ச்சிக்காகவும் ஐம்பத்து மூன்று மணி செபமாலை தொடுக்க ஆசையாய் இருக்கிறோம். இந்த செபத்தை பக்தியோடு செய்து, எவ்வித கவனச் சிதறல்களும் இல்லாமல் முடிக்க உம்முடைய அருளை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

### தூய ஆவியார் செபம்

எல். : தூய ஆவியாரே எழுந்தருளி வாரும். விண்ணகத்தில் இருந்து உமது பேரொளியின் அருள் சுடர் எம்மீது அனுப்பிடுவீர். எளியோரின் தந்தையே வந்தருள்வீர். நன்கொடை வள்ளலே வந்தருள்வீர். இதய ஒளியே வந்தருள்வீர். உன்னத ஆறுதல் ஆனவரே, ஆன்ம இனிய விருந்தினரே, இனிய தன்மை தருபவரே, உழைப்பின் களைப்பைத் தீர்ப்பவரே, வெம்மை தணிக்கும் குளிர் நிழலே, அழுகையில் ஆறுதல் ஆனவரே. உன்னத பேரின்ப ஒளியே. உம்மை நம்புவோருடைய இதயத்தின் ஆழம் நிரப்பிடுவீர். உமது அருள் ஆற்றல் இல்லாமல் மனிதரில் எதுவும் இல்லை. நல்லது அவனில் எதுவும் இல்லை. மாசு கொண்டதைக் கழுவிடுவீர். வரட்சியுற்றதை நனைத்திடுவீர். காயப்பட்டதை ஆற்றிடுவீர். வணங்காதிருப்பதை வளைத்திடுவீர். குளிரானதை குளிர் போக்கிடுவீர். தவறிப் போனதை ஆண்டருள்வீர். இறைவா உம்மை நம்பும் அனைவருக்கும் உமது ஏழு கொடைகளையும் வழங்கிடுவீர். புண்ணிய பலன்களையும் வழங்கிடுவீர். இறுதியில் மீட்பை அளித்து அழிவில்லாத இன்பமும் அருள்வீரே. ஆமென்.

### நம்பிக்கை அறிக்கை

எல்.: விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை

நம்புகின்றேன். அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.

("பிறந்தார்" எனச் சொல்லும் வரை எல்லாரும் தலை வணங்கவும்)

இவர் தூய ஆவியாரால் கருவுற்று கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார். தூய ஆவியாரை நம்புகின்றேன். புனித, கத்தோலிக்கத் திரு அவையை நம்புகின்றேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன். பாவ மன்னிப்பை நம்புகின்றேன். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலை வாழ்வை நம்புகின்றேன். ஆமென்.

### இயேசு கற்பித்த செபம்

முதல்வர் : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எல். : எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

- தந்தையாம் இறைவனுக்கு மகளாய் இருக்கிற புனித இறையன்னையே, எங்களிடம் நம்பிக்கை பயனளிக்கும் படியாக திருமைந்தனை மன்றாடும்.

### மங்கள வார்த்தைச் செபம்

முதல்வர் : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல். : புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும். ஆமென்.

- திருமகனாம் இறைவனுக்குத் தாயாராய் இருக்கிற புனித இறையன்னையே, எங்களிடம் எதிர்நோக்கு வளரும் படியாக உம் திருமைந்தனை மன்றாடும்.

(மங்கள வார்த்தைச் செபம்)

-தூய ஆவியாராகிய இறைவனுக்கு மிகவும் ஏற்புடையவராய் இருக்கிற புனித இறையன்னையே, எங்களிடம் அன்பு வளரும் படியாக உம் திருமைந்தனை மன்றாடும் (மங்கள வார்த்தைச் செபம்:)

### திருத்துவப் புகழ்

முதல்வர் : தந்தைக்கும், மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.

எல். : தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

### பாத்திமா அன்னை செபம்

எல். : ஓ என் இயேசுவே, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களை நரக நெருப்பிலிருந்து மீட்டருளும். எல்லாரையும் விண்ணுலகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிக தேவையோ, அவர்களுக்குச் சிறப்பான உதவி புரியும்.

**மகிழ்ச்சி நிறை பேருண்மைகள்**

(திங்கள், திருவருகைக்கால ஞாயிறு)

1.கபிரியேல் தூதர் கன்னி மரியாவுக்கு தூதுரைத்ததைத் தியானிப்போம்.
2.இறையன்னை எலிசபெத்தைச் சந்தித்ததைத் தியானிப்போம்.
3.இயேசு பிறந்ததைத் தியானிப்போம்.
4.இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததைத் தியானிப்போம்.
5.காணாமற்போன இயேசுவைக் கண்டடைந்ததை தியானிப்போம்.

**துயர் நிறை பேருண்மைகள்:**

(செவ்வாய், வெள்ளி, தவக்கால ஞாயிறு)

1.இயேசு இரத்த வியர்வை சிந்தியதைத் தியானிப்போம்.
2.இயேசு சுற்றூணில் கட்டுண்டு அடிபட்டதைத் தியானிப்போம்.
3.இயேசு முள்முடி தரித்ததைத் தியானிப்போம்.
4.இயேசு சிலுவை சுமந்து சென்றதைத் தியானிப்போம்.
5.இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்ததைத் தியானிப்போம்.

**மகிமை நிறை பேருண்மைகள்:**

(புதன், சனி, உயிர்ப்புப் பெருவிழா முதல் திருவருகைக் காலம் வரை உள்ள ஞாயிறு)

1.இயேசு உயிர்த்தெழுந்ததைத் தியானிப்போம்.
2.இயேசுவின் விண்ணேற்றத்தைத் தியானிப்போம்.
3.தூய ஆவியாரின் வருகையைத் தியானிப்போம்.
4.இறையன்னையின் விண்ணேற்பைத் தியானிப்போம்.
5.இறையன்னை விண்ணக, மண்ணக அரசியாக மணிமுடி சூட்டப்பெற்றதைத் தியானிப்போம்.

**ஒளி நிறை பேருண்மைகள்:**

(வியாழன்)

1.இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றதைத் தியானிப்போம்.
2.கானாவூர் திருமணத்தில் இயேசு தம்மை வெளிப்படுத்தியதைத் தியானிப்போம்.
3.இயேசு இறையரசை அறிவித்ததைத் தியானிப்போம்.
4.இயேசு உருமாற்றம் பெற்றதைத் தியானிப்போம்.
5.இயேசு நற்கருணையை நிறுவியதைத் தியானிப்போம்.

### வாழ்க அரசியே செபம்

எல். : வாழ்க அசரியே! தயை மிகுந்த அன்னையே, எங்கள் வாழ்வே, இனிமையே, தஞ்சமே வாழ்க! தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள், தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம். கண்ணீரின் பள்ளத்தாக்கில் இருந்து உம்மை நோக்கி கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே, அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும். உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவை, எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும். கருணையின் உருவே! தாய்மையின் கனிவே! இனிய கன்னித் தாயே!

### இறுதிச் செபம்

எல். : அதிதூதரான புனித மிக்கேலே, வானதூதர்களான புனித கபிரியேலே, இரபேலே, திருத்தூதர்களான புனித பேதுருவே, பவுலே, யாக்கோபே! நாங்கள் எத்தனை பாவிகளாய் இருந்தாலும் நாங்கள் மன்றாடிய இந்த ஐம்பத்து மூன்று மணி செபத்தையும் உங்கள் புகழ்ச்சியோடு ஒன்றாகச் சேர்த்து புனித அன்னை மரியாவின் திருப்பாதத்தில் காணிக்கையாக வைக்க உங்களை மன்றாடுகிறோம். ஆமென்.

### புனித கன்னி மரியாவின் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்.
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.
ஆண்டவரே, இரக்கமாயிரும்.
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைத் தயவாய்க் கேட்டருளும்.
விண்ணகத்தில் இருக்கிற தந்தையாகிய இறைவா,
- எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி.
உலகத்தை மீட்ட திருமகனாகிய இறைவா,
தூய ஆவியாராகிய இறைவா,
தூய மூவொரு இறைவா,
புனித மரியாவே,
- எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
இறைவனின் புனித அன்னையே
கன்னியரில் சிறந்த கன்னியே
கிறிஸ்துவின் அன்னையே
திரு அவையின் அன்னையே
இறையருளின் அன்னையே
தூய்மைமிகு அன்னையே
கன்னிமை குன்றா அன்னையே
அன்புக்குரிய அன்னையே
ஆச்சரியத்துக்குரிய அன்னையே
நல்லாலோசனை அன்னையே
படைத்தவரின் அன்னையே
மீட்பரின் அன்னையே
பேரறிவுள்ள கன்னியே
வணக்கத்துக்குரிய கன்னியே
போற்றுதற்குரிய கன்னியே
வல்லமையுள்ள கன்னியே
பரிவுள்ள கன்னியே
பிரமாணிக்கம் உள்ள கன்னியே
நீதியின் கண்ணாடியே
ஞானத்துக்கு உறைவிடமே
எங்கள் மகிழ்ச்சியின் காரணமே ஞானம் நிறைந்த பாத்திரமே
மகிமை நிறைந்த பாத்திரமே
பக்தி நிறைந்த பாத்திரமே
மறைபொருளின் ரோசா மலரே
தாவீது அரசரின் கோபுரமே
தந்த மயமான ஆலயமே
உடன்படிக்கையின் பேழையே
விண்ணகத்தின் வாயிலே
விடியற்கால விண்மீனே
நோயுற்றோரின் உடல் நலமே
பாவிகளுக்கு அடைக்கலமே
துயருற்றோருக்கு ஆறுதலே
கிறிஸ்தவர்களின் சகாயமே
வானதூதரின் அரசியே
குலமுதுவரின் அரசியே
இறைவாக்கினரின் அரசியே
திருத்தூதர்களின் அரசியே
மறைசாட்சியின் அரசியே
இறையடியார்களின் அரசியே
கன்னியர்களின் அரசியே
அனைத்துப் புனிதரின் அரசியே
அமல உற்பவியான அரசியே
விண்ணேற்படைந்த அரசியே
திருச்செபமாலையின் அரசியே
அமைதியின் அரசியே
குடும்பங்களின் அரசியே
குருக்களின் அரசியே

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
- எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே,
- எங்கள் மேல் இரக்கமாயிரும் சுவாமி.

இறைவனின் புனித அன்னையே, இதோ உம்மை சரணடைந்தோம். எங்கள் தேவைகளில் எங்களைப் புறக்கணியாதேயும். மகிமை மிகுந்த கன்னியே, விண்ணுலக பேறுபெற்ற அரசியே, அனைத்துத் துன்பங்களிலிருந்தும் எங்களை என்றும் காத்தருளும்.

இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும் படியாக...
இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
மன்றாடுவோமாக. இறைவா, முழு மனதுடன் உம் திருத்தாள் பணிந்திருக்கும் இக்குடும்பத்தைக் கண்ணோக்கியருளும். எப்பொழுதும் கன்னியான புனித மரியாவின் பரிந்துரையால் பகைவர் அனைவரின் தாக்குதலில் இருந்தும் எங்களை மீட்டருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரின் செய்தி

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
ஆண்டவர் இயேசுவில் என் இனிய வாழ்த்துக்கள்!

நவம்பர் மாதம் நாம் இறந்த விசுவாசிகளை நினைவுகூரும் மாதமாகும். நவம்பர் 2ம் திகதி அனைத்து ஆலயங்களிலும், சேமக்காலைகளிலும் திருப்பலிகள் நிறைவேற்றி எமக்குத் தெரிந்த மற்றும் நாம் அறிந்திராத இறந்த விசுவாசிகளுக்காக நாம் செபிப்பது எமது கத்தோலிக்க பாரம்பரியமாகும். அதேபோல 5ம் திகதி திங்கட்கிழமை புனித மரியாள் பேராலயத்தில் மாலைத் திருப்பலியின்போது எமது மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்த ஆயர்கள், குருக்கள், துறவறத்தவர் பொதுநிலையினருக்காக செபிப்போம். முடிந்தவர்கள் மாலை 5.00 மணிக்கு நடைபெறும் இத்திருப்பலியில் பங்குபற்றி செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கல்லறைகள் எமக்கு எமது மரணத்தை நினைவுபடுத்துகின்றன. எமது வாழ்வும் ஒருநாள் முடிவுக்கு வரும். இறுதித்தீர்ப்பு, தண்டனை, நரகம், மோட்சம், உத்தரிக்கும் நிலை என பல விடயங்களையும் நாம் எதிர்நோக்க வேண்டும். ஆனால் காலம் இன்னும் உள்ளது என நாம் எமது பொறுப்புகளையும் ஆன்மீகக் கடமைகளையும் ஊதாசீனம் செய்துவிட்டு மரணப்படுக்கையில் பயந்துபோய் இருக்கின்றோம். "மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?" (மத் 16:26) வாழும்போது இயேசுவின் பிரமாணிக்கமுள்ள சீடர்களாக வாழ்ந்து விண்ணகத்தை எமதாக்கிக்கொள்வோம். ஆகவே எமது நிலையான வாழ்வை அடைய, அங்கு இறைத்தந்தையை நேர்முகமாகப் பார்க்க இவ்வுலகில் எதையும் இழக்க ஆயத்தமாயிருப்போம். இறந்துபோன எமது சொந்தங்களையும் தெரிந்தவர்களையும் நினைவுகூர்ந்து அவர்களுக்காக தவறாது செபிப்போம்.

எமது மறைமவாட்ட மேய்ப்புப்பணிச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 24ம் திகதி நடைபெறும். இதற்கு ஆயத்தமாக 2019ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்படவிருக்கும் மூன்று தலைப்புகளை மையமாகக் கொண்டு இரண்டு முன்ஆயத்தக் கருத்தரங்குகள் ஒழுங்குசெய்யப்பட்டன. இதன்படி 2019ம் ஆண்டிற்கான தலைப்புகள்:

1. **விவிலிய வாசிப்பு ஆண்டு**

எம் மறைமாவட்டத்தில் அனைவரும் - தனித்து, குடும்பமாக, சமூகமாக தினமும் தவறாது விவிலியம் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கும், தூண்டும் நோக்கத்தோடு இம்முயற்சியை மேற்கொள்கின்றோம். இதற்காக தினமும் வாசிக்கும் பகுதியை நாம் தொகுத்து அச்சிட்டுத் தரவுள்ளோம். இதை நாம் தவறாது பயன்படுத்தி தினமும் விவிலியம் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குவோம். இதற்கென உங்களது வசதிக்கேற்ப தனித்தோ, குடும்பமாகவோ தினமும் ஓர் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி இம்முயற்சியில் ஈடுபடுவோம்.

2. **லூக்கா நற்செய்தி ஆண்டு**

லூக்கா நற்செய்தி பற்றிய ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள இவ்வாண்டில் நாம் முயற்சிப்போம்.

3. **சமூக நற்செய்தி ஆண்டு**

எமது சமூகத்தை குழப்பிக்கொண்டிருக்கும் முகநூலால் வரக்கூடிய தீமைகள் மற்றும் போதைவஸ்து பாவனை மூலம் வரக்கூடிய தீங்குகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்குக் கொடுக்கவும் இவற்றிக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இவ்வாண்டில் சிறப்பாக நாம் முயற்சி செய்வோம்.

இம்மூன்று தலைப்புகளை மையமாக வைத்து ஒக்டோபர் மாதம் 20ம் திகதியும் நவம்பர் மாதம் 3ம் திகதியும் இரு ஆயத்தக் கருத்தரங்குகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டது. எதிர்வரும் ஆண்டிற்கான மூன்று தலைப்புகளையும் மையப்படுத்தி பங்கு மட்டத்தில் பல திட்டங்களை வகுத்து செயல்படவும் உங்கள் பங்குத் தந்தையர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

எமது நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் மாற்றங்கள் உலக நாடுகளின் பார்வையை எம்பக்கம் திருப்பியுள்ளது. ஆட்சியில் உள்ளவர்கள் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒப்புரவுக்கும், அமைதிக்கும் தமது தனிப்பட்ட நலன் கருதாது மக்களின் சுபீட்சத்திற்காக உழைக்கவும் தம்மைக் கையளிக்கவும் இறையாசீர் வேண்டி தவறாது செபிப்போம்.

இறைவனின் ஆசீர் உங்களளோடு இருப்பதாக.

**கிறிஸ்துவில்,**

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

# பதிப்பாசிரியர் பகிர்வு




கார்த்திகை மாதம் என்றவுடன் இயல்பாகவே நாம் இறந்தவர்களைப் பற்றி நினைவுகூருகின்றோம். இதன் கொடுமுடியாக கார்த்திகை 2ம் நாள் நடைபெறும் சிறப்புத் திருப்பலி, கல்லறைகளை மந்திரித்தல், சேமக்காலையைச் சுத்தம் செய்து கல்லறைகளை அலங்கரித்தல், சிறப்புப் பிராத்தனைகள் என்பன இடம் பெறுவது வழக்கம். அதேவேளை கார்த்திகை 1ம் நாள் சகல புனிதர்களுடைய விழாவையும் கொண்டாடுகின்றோம். இந்த இரண்டு நிகழ்வுகளும் நமது கத்தோலிக்க நம்பிக்கை அறிக்கையின் (விசுவாச மந்திரத்தின்) வெளிப்பாடாகும். திருத்துதர்களின் நம்பிக்கை அறிக்கை என அழைக்கப்படும் உரோமைத் திரு அவையின் திருமுழுக்கு நம்பிக்கை அறிக்கையில் (பழைய மொழிபெயர்ப்பு: அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணம்) காணப்படும் 'புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றேன்' (பழைய மொழிபெயர்ப்பு: புனிதர்களின் சமூக உறவை விசுவசிக்கின்றேன்) என்ற கருத்து, இரண்டாம் வத்திக்கான் சங்க 'திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கம்' எண். 49-51லும், கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி எண் 946-962 லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளக்கத்தின்படி திருஅவை மூன்று நிலைகளில் உள்ளது: 1) வெற்றிவாகை சூடிய திருஅவை, 2) பயணம் செய்யும் திருஅவை, 3) துன்புறும் திருஅவை என இம் மூன்று நிலைகளும் அழைக்கப்படுகின்றன.

1). வெற்றி வாகை சூடிய திருஅவை: இம்மண்ணில் பிறந்து, கிறிஸ்துவ அறநெறியிலும் நம்பிக்கையிலும் சிறந்து விளங்கி, புனித வாழ்வு வாழ்ந்து, இறைவன் தந்த நிலைவாழ்வைப் பெற்று, வெற்றி வாகை சூடிய அனைத்து மக்களையும் (புனிதர்களையும்) வெற்றி வாகை சூடிய திருஅவை என்று குறிப்பிடுகின்றோம்.

2). பயணம் செய்யும் (போராடும்) திருஅவை: நிலையான விண்ணக வாழ்வை தமது வாழ்வின் இலக்காகக் கொண்டு, இம்மண்ணிலே பல்வேறு பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நிறைவாழ்வை நோக்கிப் பயணம் செய்யும் இறைமக்களின் கூட்டத்தை பயணம் செய்யும் திருஅவை என்று குறிப்பிடுகின்றோம்.

3). துன்புறும் திருஅவை: இம்மண்ணுலக வாழ்வை விட்டு இறைவனடி சேர்ந்து, தம் பாவங்களுக்குப் பரிகாரமாக உத்தரிக்கின்ற இடத்தில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்ற இறைமக்களின் - ஒரு பகுதியினரையே (உத்தரிக்கும் ஆன்மாக்கள்) துன்புறும் திருஅவை என்று குறிப்பிடுகின்றோம்.

அந்த வகையில் வெற்றி வாகை சூடிய திருஅவையினர் (புனிதர்கள்) தங்கள் பரிந்துரை மன்றாட்டினால் பயணம் செய்யும் (போராடும்) திருஅவையினராகிய நமக்காக இறைவனிடம் பரிந்துரைக்கின்றனர். பயணம் செய்யும் திருஅவையினராகிய நாம் நமது இறைவேண்டலினால் துன்புறும் திருஅவையினருக்காக (உத்தரிக்கின்ற ஆன்மாக்கள்) இறைவனிடம் பரிந்துரைத்து, எங்கள் செபம், நற்செயல்கள், பரிபூரண பலன்களினால் இவர்களுக்கு உதவி செய்ய முன்வருகின்றோம்.

எனவே, "விண்ணக மாட்சியில் இருப்பவர்களும் சாவுக்குப் பின் இன்னும் தூய்மைபடுத்தப் பெறுகின்றவர்களுமான நம் சகோதரர் சகோதரிகளுடன் நமக்குள்ள நெருங்கிய உறவு பற்றி நம் முன்னோர்கள் கொண்ட இந்த கண்ணியமான நம்பிக்கையை" (காண். திருச்சபை 51.) நாம் மனதிலிருத்தவும், அந்த நம்பிக்கையினால் வரும் உறவை வளர்த்துக்கொள்ளவும் இக் கார்த்திகை மாதத்தை பயனுள்ள முறையில் செலவிட வாழ்த்துகிறோம்.

## மறைமாவட்ட நாட்காட்டி கார்த்திகை 2018

01. ▪ சகல புனிதர்கள் - பெருவிழா
02. ▪ சகல ஆன்மாக்கள் - நினைவு
03. ▪ புனித மாட்டீன் தெ போரஸ்: நினைவு
▪ மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு: முன்னாயத்தக் கருத்தரங்கு.
04. ▪ பொதுக்காலம்: 31ம் ஞாயிறு
05. ▪ மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்த ஆயர்கள், குருக்கள், துறவற சபை சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் ஆகியோருக்கான திருப்பலி.
09. ▪ இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு: விழா
10. ▪ மறையாசிரியர் கருத்தரங்கு.
11. ▪ பொதுக்காலம்: 32ம் ஞாயிறு
12. ▪ புனித யோசேபாத்து, ஆயர்: நினைவு
▪ அருள்பணி. I. ஜீட் சர்வானந்தன்: குருத்துவ நினைவு.
17. ▪ கங்கேரி புனித எலிசபெத்து: நினைவு
▪ நற்கருணை நாதருடன் 12 மணி நேரம்: இருதயபுரப் பங்கு.
18. ▪ பொதுக்காலம்: 33ம் ஞாயிறு.
21. ▪ புனித கன்னிமரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தல் - நினைவு
22. ▪ புனித சிசிலியா: நினைவு
24. ▪ மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு. வருடாந்தப் பொது செயலமர்வு
25. ▪ பொதுக்காலம் 34ம் ஞாயிறு: கிறிஸ்து அரசர் பெருவிழா
▪ கணேசபுரம் - கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா.
▪ கடற்படைத்தளம் - கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா
▪ கன்னியா – கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா
▪ விவிலிய வார ஆரம்பம்.
30. ▪ திருத்தூதரான புனித அந்திரேயா - விழா

## சிரிக்க...... சிந்திக்க.............

எல்லோரையும் நம்புவது அபாயகரமானது ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது

- ஆப்ரகாம் லிங்கன்



மனைவி:- நேற்று நான் பார்த்து முழுக்க முழுக்க ஓர் நகைச்சுவை படம். சிரித்து சிரித்து பாதி உயிர் போய்விட்டது.
கணவன்:- இன்னும். ஒரே ஒரு தடவை அந்தப்படத்தைப் போய் பாரேன்.



மனைவி : என்னங்க சொர்க்கத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியாதாமே?
கணவன் : அதனாலதான்டி அது சொர்க்கம்.

டீச்சர்: உன் பேர் என்ன?
மாணவி: பொன்னி மிஸ்...
டீச்சர்: ஸ்வீட் நேம்...
மாணவி: ஸ்வீட் நேம் இல்ல மிஸ்...
ரைஸ் நேம்...

உனக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை எத்தனை பேருக்கு கிடைக்கவில்லை என்று நீ தெரிந்து கொண்டால் கடவுளுக்கு நன்றி சொல்ல மட்டுமே கோவிலுக்குச் செல்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 17

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## ஆசிரியர் : இலகுவில் கிடைக்கப்படக் கூடியவரும். அணுகப்படக்கூடியவரும்

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வளர்ந்துள்ள இக்காலத்தில் ஆசிரியரின் பணி ஓரளவு இலகுபடுத்தப்பட்டுள்ளது எனக் கூறலாம். கணணி ஊடாகக் கல்வி, மொழி ஆய்வு கூடங்கள் (Language Lab) மற்றும் புத்தாக்க உத்திகள் போன்றவற்றின் வரவால் ஆசிரியர் பணியின் இன்றியமையாமை அருகிப்போய்விடுமோ என்ற கேள்வி மேற்கிளம்ப வாய்ப்புண்டு. இருந்தும் இயந்திரங்கள் மாணவருக்கு ஆலோசனை வழங்க முடியுமா? கணனிகள் அன்பையும் பாசத்தையும் வழங்க முடியுமா? என்ற கேள்விகளையும் இவ்விடத்தில் கேட்க வேண்டியதாயுள்ளது. இயந்திரங்கள் மூலம் மாணவர்கள் அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அதற்கும் மேலாக மாணவரின் மனவெழுச்சி சம்மந்தமான வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி, போன்றவை அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. இவை ஆசிரியரால் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

மானிடர் என்ற வகையில் மாணவர் சகமாணவரோடு இடைவினை கொள்பவர்களாகவும் பதில் செயல் (Rcaction) விழைவிப்பவர்களாகவும் இருப்பர். இங்குதான் ஆசிரியரின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது. தமது வீட்டில் செலவிடும் நேரத்தைவிட அதிக நேரத்தை பாடசாலையிலே தான் பிள்ளைகள் செலவிடுகின்றார்கள். மாணவர்களின் எதிர்பார்ப்புக்களையும் ஏமாற்றங்களையும் பாதிப்புக்களையும் விருத்திகளையும் புரிந்து கொள்ள மிகப்பொருத்தமான நபர் ஆசிரியரேயாவார். ஏனெனில் ஆசிரியர்களோ நீண்ட நேரமும், மிக நெருக்கமாகவும், மாணவர்களோடு பயணிப்பவர்களாகவும் ஆதரவுக்கும், ஆலோசனைக்கும், ஆறுதலுக்கும் பிள்ளைகள் ஆசிரியர்களைத்தான் நாடுவார்கள். இங்குதான் ஆசிரியரின் இன்னுமொரு முக்கிய பணி சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வேளையில் தான் ஆசிரியர் இலகுவில் கிடைக்கக் கூடியவராகவும், அணுகப்படக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மாணவ ஆலோசகர்கள் பாடசாலையில் நியமிக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவ ஆலோசகராகச் செயற்பட வேண்டிய கடப்பாடு உள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவருக்கு எவ்வேளையும் கிடைக்கக் கூடியவராக இருப்பது மட்டுமல்ல. மாணவரால் எளிதாக அணுகப்படக் கூடியவராகவும் இருத்தல் மிக முக்கியமானதாகும். மாணவர்பால் அன்பும், பாசமும், இரக்கமும், புரிதலும் உள்ள ஆசிரியரைத்தான் மாணவர் தேடி வர வாய்ப்புண்டு.

பாடசாலையில் பயின்று கொண்டு இருக்கும் காலத்தில் தான் மாணவர் பருவமடைந்து முன்கட்டிளமைப்பருவத்தை சந்திப்பார்கள். இப்பருவத்தில் பெற்றோரின் உடனிருப்பு மிகுதியாகத் தேவைப்பட்டாலும் பெரும்பாலும் அது சாத்தியமற்றதாகின்றது. ஏனெனில் இக்கால பொருளாதார அழுத்தத்தினால் பெற்றோர் இருவரும் தொழில் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமது பிள்ளைகளின் சமூக, பொருளாதார, கல்விசார் தேவைகளை பூர்த்தி செய்வதிலேயே பெற்றோரின் கூடிய நேரம் செலவாகின்றது. ஒரு தத்துவம் இவ்வாறு கூறுகின்றது.

**"அனேக பெற்றோருக்குப் பிள்ளைகள் உண்டு.**
**ஆனால் ஒரு சில பிள்ளைகளுக்குத் தான் பெற்றோர் உண்டு"**
(Many Parents have children - few children have parents)

இச்சூழலில் பெற்றோருக்கான மாற்றீடு ஆசிரியர்களேயாவார். மேலைத்தேய நாடுகளில் மாணவ ஆலோசகர்கள் (Student Counsellor) முறையான தொழிற்பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இலங்கையைப் பொறுத்தவரை பாடசாலைகளில் மாணவ ஆலோசகர்கள் இருந்தாலும் முறையான தொழிற்பயிற்சியும் அனுபவமும் அற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆசிரியர்கள் எந்த துறை சார்ந்தவர்களாக இருந்தாலும் தொழில்தகைமை டிப்ளோமா பெற கல்வி உளவியலை ஒரு அலகாகக் கற்கின்றனர். இத்தோடு சேர்த்து அடிப்படை உளவியல் ஆலோசனை அறிவையும் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஆசிரியர் மாணவருக்கு எளிதாகக் கிடைக்கக் கூடியவராகவும் அணுகக் கூடியவராகவும் மட்டுமல்ல. உளவியல் தேவைகளை புரிந்து வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டும்.

தொடரும்....................

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



**20. மறைமாவட்டத்தின் ஆயர் ரொமேரோ**

1974 -இல் சந்தியாகோ தே மரியா மறைமாவட்டத்தின் ஆயரானார். அவரது பிறப்பிடம் சியுதத் பாரியோசும் இம் மறைமாவட்டத்தில் அடங்கும். சமூகக் கரிசனை குறைவு, அரசியல் விழிப்பில் அக்கறை இன்மை, எச்சூழலிலும் நிலைப்பாடு எடுக்காமல் தப்பித்துக் கொள்ளல் என்ற பாதுகாப்பு வலயத்தில் அதிக நாள் இவரால் வாழ இயலவில்லை.

எல் சால்வதோரின் பல பகுதிகளில் சமூக அரசியல் போராட்டங்கள் நடந்தது போன்று அவரது மறைமாவட்டத்திலும் நடந்தன.

சில பண்ணை விவசாயிகளும் தொழிலாளர்களும் ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டாலும் பெரும்பான்மையானோர் திருச்சபையின் சமூகப் படிப்பினையில் தங்கள் கவனத்தைத் திருப்பினர்.

பெரும்பான்மையானோர் அடித்தள சமூகங்களில் சேர்ந்து நற்செய்தியின் ஒளியில் சமூக நிகழ்வுகளை ஆய்வு செய்தனர்.

ஆளும் வர்க்கத்தின் பதினான்கு குடும்பத்தினர் அனைத்து சமூக அரசியல் போராட்டங்களையும் மார்க்சியம் எனக் கருதினர். போராட்டக்காரர்கள், தொழில் சங்கத்தினர், மனித உரிமை ஆர்வலர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள், குருக்கள் என அனைவரையும் கொல்லும் ஆணை இராணுவத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

பணத்திற்கு வேலை செய்யும் கொலைப் படைகள் நகர்ப்புறத்தில் சுற்றி அலைந்து பணப்பறிப்பு, கற்பழிப்பு, சூறையாடல் என அட்டூழியங்களைச் செய்தனர். ஆளும் வர்க்கத்தினர் இதற்கு பாதுகாப்பு அளித்தனர்.

**21. அரசியல் நிலைப்பாட்டில் ரொமேரோ**

நாகரீகமாக நீதிக்கான போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையை ரொமேரோ கண்டித்தார்.

வன்முறையில் காதல் கொண்ட உண்மைப் புரட்சியாளர்களையும் கடிந்து கொண்டார். இவரது வார்த்தைக்கு யாரும் செவிமடுக்கவில்லை.

1975ஆம் அண்டு ஜீன் 21ம் நாள் சால்வதோரின் தேசியப்படையினர் டெட்காலஸ் என்ற இந்திய கிராமத்தைச் சார்ந்த ஐந்து தொழிலாளிகளைக் கழுத்தை நெறித்துக் கொன்றனர்.

ரொமேரோ அந்த இடத்திற்கு விரைந்து சென்றார். குடும்பத்தினருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி திருப்பலி நிறைவேற்றினார்.

திருச்சபையும் அரசியனும் முற்றிலும் வேறுபட்டவை என்ற தனது நிலைப்பாட்டை மாற்றி இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ள வேண்டிய தளங்கள் என்ற புதிய நிலைப்பாட்டை உருவாக்கினார்.

**22. கொலை மிரட்டலுக்குள்ளான ரொமேரோ**

இராணுவத்தின் கொடுமைகளை இது அப்பட்டமான மனித உரிமை மீறல் எனச் சாடினார் ரொமேரோ.

இராணுவ ஆட்சி தலைமையில் இருந்த அர்துரோ அர்மந்தோ மொலினாவுக்கு இதனைக் கண்டித்து கடிதம் எழுதினார்.

இந்தக் கொலைக்கு காரணமான படைத்தளபதியையும் தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கண்டித்தார். படைத்தளபதி தனது ஆள்காட்டி விரலை நீட்டி '' உனது அங்கி குண்டு துளைக்காத புல்லட் புரூப் அல்ல' என்றார்.

இதுவே ரொமெரோவுக்குக் கிடைத்த முதல் கொலை மிரட்டல்.

**23. குதிரையில் ரொமேரோ**

சந்தியாகோ தே மரியா மறைமாவட்டத்தின் ஆயராக செயல்பட்ட இரண்டு ஆண்டுகளில் குதிரையில் மறைமாவட்டத்தைச் சுற்றி வந்தார்.

மக்களின் எதார்த்த வாழ்வு பயமுறுத்துவதாக அமைந்தது. மருந்து வாங்கக் கூட பணம் இல்லாமல் குழந்தைகள் மடிந்தனர். பலநாள் கூலி கொடுக்கப்படாமல் தொழிலாளர்கள் மெலிந்தனர். கூலி கேட்டால் தடியடிக்கு ஆளாயினர்.

ரொமெரொ மறைமாவட்ட வளங்களை மற்றும் தனது பணத்தை இந்த ஏழைகளுக்காக பயன்படுத்த ஆரம்பித்தார். இந்த இரக்கச் செயல் போதுமானதல்ல என்பதையும் தெரிந்திருந்தார்.

எனவே தனது நாட்குறிப்பேட்டில் ''உலகின் ஏழைகள் நமக்கு கற்றுத் தருவது என்னவென்றால் விடுதலை என்பது ஏழைகள் அரசின் உதவிகளையோ, திருச்சபையின் இரக்கச் செயல் உதவிகளையோ பெற்றுக் கொண்டிருப்பவர்களாக இருக்கும் வரை கிடைப்பதில்லை, மாறாக அவர்கள் தான் போராட்டத்தை முன்னெடுக்கும். விடுதலைக்கு அடியெடுத்து வைக்கும் முகவர்கள்'' என்று எழுதினார்.

தொடரும்......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

## அலகு - 8: உடன் பயணித்தல், வலுவின்மையைத் தெளிந்து தேர்ந்து ஒருங்கிணைத்தல்

**இல.** 291 – அறநெறியியல் (ஒழுக்கவியல்) தளர்ச்சியுற்று அவதியுறும் திருமணம் மற்றும் குடும்பம் ஆகியவற்றை கடவுளின் விருப்பத்திற்கு ஏற்றபடி வாழ உதவும் வண்ணம் திருச்சபை அவர்களுக்கு இரக்கம் காண்பிக்க விரும்புகிறது.

**இல.** 292 – திருச்சபையின் திருமணம் குறித்த வரைவிலக்கணம் நிறைவானது. அதேவேளையில் வேறு வடிவிலான (திருமண) இணைப்புக்கள் நேரடியாக உண்மை திருமணத்தை எதிர்ப்பதாக இருந்தாலோ அல்லது அதன் ஒருசில விடயங்களை மட்டுமே கொண்டிருந்தாலோ, திருச்சபை அத்தகைய இணைப்புக்களில் காணப்படும் நன்மைத்தனத்தை குறைவாக மதிப்பிடுவது கிடையாது.

**இல.** 293 – இன்று அதிகமான மணமக்கள் முறையற்ற நிலைமைகளில் வாழ்கின்றனர். அதுமட்டுமல்லாது உண்மைத் திருமண உறவில் இணைய விருப்பமின்றியும் இருக்கலாம். மறைப்பணியாளர்கள் இத்தகையோரை படிப்படியாக நற்செய்தி வாழ்வுக்கு கொண்டுவர வழிகளை கண்டுபிடிக்க வேண்டும்.

**இல.** 294 – உண்மைத் திருமணத்தில் இணைவதைக் காட்டிலும் கூடிவாழ்வதற்கான பல காரணங்கள் காணப்படுகின்றன. அவர்களுக்கு அத்தகைய காரணங்கள் இருந்தபோதிலும், அவர்கள் நற்செய்தியின்படி வாழ பொறுமையாகவும், அவதானமாகவும் உதவிட வேண்டும்.

**இல.** 295 – படிப்படியான சட்ட அணுகுமுறை கண்டுபிடிப்பது யாதெனில், மக்கள் சட்டம் கோருவதை முழுமையாக வாழ்ந்துமுடிக்க முடியாது என்பதனை கற்பிப்பதுடன், அருளின் உதவியினால், தாங்கள் ஆற்றால் சட்டத்தின் பிரகாரம் வாழ முடியும் என்பது அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

**இல.** 296 – தேவையில் இருப்போருக்கு இரக்கம் காட்டுவதே கிறிஸ்துவின் வழியாகும். அதுவே திருச்சபையின் வழியுமாகும்.

**இல.** 297 – இரக்கம் என்பது மக்கள் தாங்கள் விரும்புவது அனைத்தையும் செய்துமுடிக்க விடுவது என்பதல்ல மாறாக அவர்களை உண்மை உறவிற்கு இட்டுச் செல்வதாகும்.

**இல.** 298 - மக்கள் குற்றமென அறிந்தோ, அறியாமலோ சிக்கலான சில சூழ்நிலைகளில் தள்ளப்பட்டுள்ளார்கள். அத்தகையோருக்கு இரக்கத்துடன் உதவுவதற்கு உதவியாக அவர்களது நிலையினை அறிந்துகொள்ள வேண்டும்.

**இல.** 299 - மணமுறிவு (விவாகரத்து) பெற்று மீளவும் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களை எவ்வாறு சமூகத்தில் இணைத்துக்கொள்வது என்பது குறித்து நம்பிக்கை வாழ்வுடன் எந்தவிதமான இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளாமலோ அல்லது அதற்கு அபகீர்த்தியினை ஏற்படுத்தாமலோ இருக்க நல்முயற்சிகளும், புத்தாக்கமும் தேவைப்படுகிறது.

**இல.** 300 - மணமக்கள் மறைப்பணியாளரின் துணையுடன் தங்களது செயல்களுக்கு பொறுப்பேற்பதுடன், அதற்கான ஒப்புரவினை நாடுவதுடன், நல்முன்னுதாரணமாக செயற்பட முனைவதுடன், அபகீர்த்தியினை ஏற்படுத்துவதையும் தடுக்க வேண்டும்.

**இல.** 301 - ஒழுங்கீனமான சூழ்நிலையில் மனிதனொருவன் வாழ்கின்றான் என்பது அம்மனிதன் சாவான பாவநிலையில் உள்ளான் என்று பொருள்கொள்ள முடியாது.

**இல.** 302 - சில விடயங்கள் வெளிப்படையாகவே தீமையான செயலினதும் மற்றும் ஒழுங்கீனமான நிகழ்வின் இயல்பினதும் கனாகனத்தை குறைத்தோ அல்லது முழுமையாகவோ இல்லாது செய்துவிடும்.

**இல.** 303 - உண்மையின் பிரகாரம் தங்களது மனச்சான்றினை அமைத்துக்கொள்ள மக்கள் உழைக்க வேண்டும். அவர்கள் இருக்கும் நிலையிலேயே ஆசைப்பட்டபடி கடவுளின் சித்தத்தின் பிரகாரம் வளர வேண்டும்.

**இல.** 304 - மிகவும் குறிப்பிட்ட தனிப்பட்ட சூழ்நிலையின் அடிப்படையில் நோக்குமிடத்து நடைமுறை அறிவும், அறநெறி தீர்ப்பும் பொருத்தப்பாடு அற்றதாகவும், உறுதியற்றதாகவும் மாறிவிடுகிறது.

**இல.** 305 - பொதுவான நடைமுறை சட்டங்களை வைத்து மக்களை தீர்ப்பிடுவதனை விடுத்து, மறைப்பணியாளர்கள் அத்தகையோரைத்தேடி, அவர்கள் எத்தகைய குற்றம் புரிந்திருந்தாலும் அவற்றிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவர வேண்டும்.

**இல.** 306 - பரஸ்பர பரிவும், இரக்கச் செயல்கள் புரிவதற்கான வாய்ப்பும் மக்கள் வளர்வதற்கு உதவி புரியும்.

**இல.** 307 - திருமணத்தின் முழுமையான கொடை குறித்து இளையோருக்கு நாம் சொல்லிக் கொடுக்க முன்வர வேண்டும்.

**இல.** 308 - தங்கள் பலயீனத்தினால் வழிதவறியவர்களுடன் உடன்பயணிக்க நமக்கு பொறுமையும், இரக்கமும் வேண்டும்.

**இல.** 309 - கிறிஸ்துவை பின்பற்றுவதன் வாயிலாக நாம் அனைத்து மாந்தருக்கும் கடவுளின் இரக்கத்தினை கொண்டு வருகின்றோம்.

**இல.** 310 - அடுத்தவருக்கு கடவுளின் இரக்கத்தினை கொண்டுவருவது என்பது நாம், நமது நம்பிக்கை பயணத்தில் தளர்ச்சியுற்றுள்ளோம் என்று பொருள்படாது.

**இல.** 311 - அறநெறி இறையியலில் இரக்கமானது கடவுளின் நீதியின் நிறைவு எனக்கருத வேண்டும்.

**இல.** 312 - பாவச் சூழ்நிலையில் வாழ்கின்றவர்கள் இதய சுத்தியுடன் தீர்வினைத் தேடுகின்றார்கள், அவர்கள் இரக்கத்துடனும், பேரன்புடனும் நோக்கப்பட வேண்டுமென்கின்ற தீர்மானம் தேவைப்படுகின்றது.

## அலகு - 9: திருமணம், குடும்பம் என்பவற்றின் அருள்வாழ்வு

இல. 313 - குடும்ப வாழ்வினூடாக தனித்துமான ஆன்மீகம் பிறக்கின்றது.

இல. 314 - திருமண அன்பில் கடவுள் பிரசன்னமாய் இருக்கிறார்.

இல. 315 - திருமண ஆன்மீகத்தின் அடிப்படையானது கடவுள் குடிகொள்கின்ற ஆழ்ந்த திருமண உடன்படிக்கையில் தங்கியுள்ளது.

இல. 316 - குடும்பத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இரக்கச் செயல்கள் குடும்ப ஆன்மீகத்தின் திறவுகோலாகும்.

இல. 317 - குடும்ப வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், துயரங்களை சிலுவையுடன் இணைப்பதன் வாயிலாக, திருமண வாழ்வின் அனைத்து விடயங்களையும் புனிதப்படுத்த உதவுகின்றது.

இல. 318 - வீட்டில் ஆரம்பிக்கின்ற குடும்பச் செபமானது, ஞாயிறு பங்குத் திருச்சபையின் திருப்பலியில் நிறைவு பெறுகின்றது. இது குடும்ப வாழ்விற்கு அத்தியாவசியமாகும்.

இல. 319 - குடும்பங்கள் பிரமாணிக்கமாக வாழ தங்களது வாழ்நாள் திருமண அர்ப்பணத்தை நாளும் புதுப்பிக்க வேண்டும்.

இல. 320 - குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் கடவுளுடன் கொண்டுள்ள தனிப்பட்ட உறவானது அவர்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களுடன் கொண்டுள்ள உறவைவிட முன்னிலை பெற்றதாக இருக்க வேண்டும்.

இல. 321 - கணவன் மனைவி ஒருவர் ஒருவருக்கு காட்டும் அன்பானது, கடவுள் தன் மக்கள் மீது காட்டும் அன்பின் நடைமுறை பங்கேற்றலாகும்.

இல. 322 - குடும்பத்தில் பகிரப்படும் இந்த அன்பானது, கடவுளை வழிபடும் வழியும், அவரது அருளினை அடுத்தவருக்கு பகிரும் முறையுமாகும்.

இல. 323 - கிறிஸ்து தமது பணிக்காலத்தில் தேவைப்படுவோரின் மத்தியில் பிரசன்னமாய் இருந்ததுபோல குடும்பத்தில் நாம் அன்பு செய்வோருக்கு தேவையான சூழ்நிலைகளில் கூடவே இருக்க வேண்டும்.

இல. 324 - குடும்ப ஆன்மீகமானது குடும்பத்திற்குள் பகிரப்படும் பரிவுள்ள அன்பினாலும், குடும்பத்திற்கு வெளியே அடுத்தவர் மத்தியில் பகிரப்படும் அன்பினாலும் வரையறை செய்யப்படுகிறது.

இல. 325 - எந்தவொரு குடும்பமும் நிறைவானதல்ல, ஆயினும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் வாய்ப்புக்களை பயன்படுத்தி நிறைவினை நோக்கி வளர கடவுள் அழைக்கின்றார்.

**(முற்றும்)**

## ஆன்மாக்களுக்கு உதவுவோம்



நிரந்தரமில்லா இவ்வுலகில்
யாருமே நிரந்தரமில்லை
எதுவும் சொந்தமுமில்லை
பிறப்பு என்றால்
அடுத்து இறப்பு மட்டுமே
நேற்றிருந்தோர் இன்றில்லை.
இன்றிருந்தோர் தெரியவில்லை
இதுவே வாழ்வின் உண்மைநிலை
ஆனாலும்,
எம்முடனே வாழ்பவர்களையும் மறந்து
ஓடுகின்றோம், தேடுகின்றோம்
இவர்களை மறந்திட்ட நாம்
இறந்தவர்களை நினைத்திடுவோமா?
என்றோ ஓர் திருப்பலி
அதுவும் தவறினால்
நவம்பர் இரண்டில் ஓர் நினைவு கூறல்
பல தடவைகளில்,
அதுவுமில்லா நிலை
இறந்தவர்களை நாம் மறப்பது
அவர்களுக்கு கொடுக்கும் தண்டனை
நின்று நிதானித்தால்
எத்தனை உறவுகளை
நாம் மறந்துவிட்டோமென புரியும்
வாழ்பவர்களுக்காக செபிப்பது நன்று
இறந்தவர்களுக்காக செபிப்பது மிக நன்று
ஆன்மாக்களிடம் கேட்டால் தெரியும்
இறந்தபின் செபிக்க முடியாத அவர்கள்
செபிப்பதற்காக
ஏங்குவதை எடுத்துரைப்பார்கள்
ஆன்மாக்களை மீட்டெடுப்போம்
விண்ணுலக வீட்டை அவர்கள்
சென்றடைய வழி அமைப்போம்

**திருமதி. ஜோ. அனஸ்ரி அமலராணி**
**(இயேசுவின் நாமத்தில்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி வார சிறப்பு நிகழ்வுகள்

திருகோணமலை மறைமாவட்டத்தில் இவ்வருட மறைமாவட்ட கருப்பொருளுக்கமைவாக (புனித மாற்கு, ஞானப்பெற்றோர், சிறிய கிறிஸ்தவ குழுமம் - அன்பியம்) மறைக்கல்வி வார சிறப்பு திருப்பலி மற்றும் நிகழ்வுகளும், இறுதி நாளான "தேசிய மறைக்கல்வி தினமும்" சிறப்பாக கணிசமான பங்குகளில் கொண்டாடப்பட்டது, வரவேற்கத்தக்க விடயமாகும்.

மறைக்கல்வியின் அவசியம், அதன் தேவை அறிந்து செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மறைக்கல்வி தினத்தை சிறப்பாக வழிநடத்திய அனைத்துப் பங்குகளுக்கும் எமது நன்றிகளும், வாழ்த்துக்களும்.








# மறைமாவட்ட விவிலிய எழுத்துப்பரீட்சை - 2018

மறைமாவட்ட விவிலிய எழுத்துப்பரீட்சை கடந்த 13.10.2018 அன்று நடைபெற்றது. இப்பரீட்சைக்கு இம்முறை புதிய பங்குகளும் இணைந்து கொண்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். பரீட்சை நிலையப் பொறுப்பாளர்களும் தங்கள் பணிகளை திறம்பட செய்துள்ளனர். மாணவர்களும் தங்கள் பரீட்சையை எந்த இடையூறுகளுமின்றி எழுதினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.








01ம் பக்கத் தொடர்ச்சி .............. 100வது வயது அருட்சகோதரி

இத்திருப்பலியிலே வெளிநாடுகளில் வசிக்கும் அருட்சகோதரியின் உறவினர்கள், இலங்கை வாழ் உறவினர்கள், எமது சபை அருட்சகோதரிகள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இணைந்து 100 வயது அருட்சகோதரிக்காக ஆண்டவருக்கு நன்றி கூறினர். ஆசியா கண்டத்தில் வாழும் அருட்சகோதரிகளில் 100 வயதைக் கடந்து வாழும் முதல் சகோதரி இவரேயாவார். இவர் தனது நவசந்நியாச காலத்தை இந்தியாவின் அமராவதி - மகாராஷ்ராவில் நிறைவு செய்து 1941ல் தனது முதல் வார்த்தைப்பாட்டையளித்தார். பெற்றோர் இட்ட பெயர் அருள்மேரி. பின்னர் அருட்சகோதரி பேணடீன் ஆனார்.

இந்தியாவில் தெப்பங்குளத்திலுள்ள எமது திருச்சிலுவைக் கல்லூரியில் தனது முதல் மறைப்பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து கோவா, கொன்ட்ரோல்மன்ட் மற்றும் தமிழ் நாட்டில் ஆரம்பப் பள்ளி ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார்.

எமது மேற்படி சபை பிரான்சில் ஆரம்பித்து, இந்தியாவில் பல இளம் பெண்களை அருட்சகோதரிகளாகக் கொண்டு அர்ப்பணிப்போடு பணியாற்றியது. 1951ல் இலங்கை மண்ணிலே இச்சபை காலடி எடுத்து வைத்தது. மறைப்பணியும் சமூக பணிகளுமே பிரதான பணிகளாக ஆற்றப்பட்டன. எமது நூற்றாண்டு பிறந்த நாள் சகோதரி பேணடீன், அக்காலத்திலே எமது ஹிங்குராங்கொட தூய சூசையப்பர் ஆண் பிள்ளைகள் விடுதிக்குப் பொறுப்பாளராகவும், படிவத்தை (கண்டி) யிலிருந்த எமது வைத்தியசாலை மருந்தகத்திலும் பின்னர் தையல், பின்னல் நிலைய பொறுப்பாளராகவும், பேராதெனிய மடத்திலும் பின்னர் [illegible] தலைவியாகவும், பேலியகொடவில் எமது சிறுவர் பராமரிப்பு நிலைய பொறுப்பாளராகவும் பணியாற்றி தற்போது துறவற வாழ்விலே 77 வருடங்களைக் கடந்துள்ளார். இவ்வளவு காலம் வாழ்வதன் இரகசியம் என்ன என அவரை வினவினேன்? "அது கடவுளின் சித்தம். நான் எந்த நேரமும் செல்வதற்கு ஆயத்தமாக உள்ளேன். அவர் அழைக்கிறார் இல்லை" என்றார். இந்த வயதில் எமக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள எனக் கேட்டேன். அவர் இவ்வாறு கூறினார். "இறையுறவும் மனநிறைவும் வாழ்க்கைக்கு அவசியம். செபத்தில் இறைவனுடனான உறவை நான் ஒருபோதும் மறந்ததில்லை. மடத்திற்கு வந்த நாளிலிருந்து எனது செபவாழ்வுக்கு பிரமாணிக்கமாக இருந்துள்ளேன். மன அமைதி என கூறும்போது நான் இளம் சகோதரியாக இருந்த காலத்திலும் வாழ்விலே சந்தித்த சவால்கள், பிரச்சினைகளில் அதிகம் அலட்டிக்கொண்டது கிடையாது. அவற்றையெல்லாம் அமைதியாக ஏற்றுக்கொண்டு இறைவனோடு ஒன்றித்து எனது பணியிணை ஆற்றி வந்துள்ளேன். இதனால் நான் என்றும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். என்றார். இறுதியாக "இப்போது உங்கள் விருப்பம் என்ன? என்றேன். "கூடிய சீக்கிரம் ஆண்டவரிடம் செல்ல வேண்டும்" என்றார். ஆண்டவர் இவருக்களித்த இந்த 100 வருடங்களுக்காக சிறப்பாக நோயற்ற வாழ்வைத் தந்துள்ளமைக்காக அவருக்கு நன்றி கூறுவோம். 100 வருடங்கள் வாழ வேண்டுமா? அவ்வாறாயின் மறக்க வேண்டாம். இறையுறவு, மன அமைதி

அருட்சகோதரி ரஞ்சி போல்துரை
ஹெவலொக் வீதி
கொழும்பு 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# புனித மாற்கு ஒத்தமை நற்செய்தி

நாம் பெற்றுள்ள நான்கு நற்செய்திகளுள் முதலாவதாக எழுதப்பட்டது மாற்கு நற்செய்தியே. இந்நற்செய்தியில் ஒரு வித்தியாசமான அணுகுமுறை இடம்பெற்றுள்ளதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கமே இயேசுவைப் பற்றி மக்களுக்கு அறிவித்தல் என்பதே! ஆனால் மாற்கு நற்செய்தியில் பலமுறை இயேசு தன்னைப் பற்றி பிரபலப்படுத்த வேண்டாம் என்று அடித்துக் கூறுவதைத்தான் நாம் வாசிக்கின்றோம். கீழ்க்காணும் எடுத்துக் காட்டுகள் இதற்குச் சான்று.

தொழுகைக் கூடத்தில் இயேசு பேயை விரட்ட வருகின்றார். பேய் அவரை "கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று அறிக்கையிடுகின்றது. ஆனால் இயேசு அதைப்பற்றி கோபம் கொண்டு "வாயை மூடு" என்று அதட்டி விரட்டுகிறார். (மாற் 1:21-28)

இயேசு ஒரு தொழுநோயாளரை குணமாக்குகின்றார். ஆனால் உடனடியாக "இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், கவனமாய் இரும்" என்று எச்சரிக்கிறார் (மாற்கு 1:43-44)

தொழுகைக்கூடத் தலைவர் யாயீரின் மகள் இறந்து விடுகின்றாள். இயேசு அவருடைய வீட்டிற்குச் சென்று சிறுமிக்கு மீண்டும் உயிர் தருகின்றார். "உடனே இதை யாருக்கும் தெரிவிக்கக் கூடாது" என்று ஒரு கண்டிப்பான கட்டளை தருகின்றார் (மாற் 5:43).

இயேசு யார் என்பது பற்றிய உரையாடலிலே பேதுரு, "நீர் மெசியா" என்று சரியான விடை தருகின்றார். ஆனால் இயேசு உடனே தம்மைப் பற்றி எவரிடமும் சொல்ல வேண்டாம் என ஒரு கண்டிப்பான கட்டளையைத் தருகின்றார். (மாற் 8:30).

இவ்வாறு மாற்கு நற்செய்தியிலும், இதைத் தழுவி எழுதப்பட்டுள்ள மத்தேயு, லூக்கா நற்செய்திகளின் ஒரு சில பகுதிகளிலும் ஒரு வினோதமான இலக்கிய பாணியை நாம் காண்கின்றோம். நற்செய்தி நூல்களின் நோக்கமே இயேசுவை மக்களுக்கு எடுத்துரைப்பது என்றால், தன்னைப் பற்றி பேயோ, குணமானவர்களோ, சீடர்களோ ஒரு சில உண்மைகளைப் பறைசாற்றும்போது இயேசு தடை விதிப்பது ஏன்? இத்தகைய கேள்வி பல்லாண்டுகளாக பலரை சிந்திக்க வைத்தது. இதற்கு ஒரு தெளிவான விடை தந்திருப்பவர் வில்ஹெல்ம் ரீட் (Wilhelm Wrede) என்கிற ஒரு ஜெர்மனிய ஆய்வாளர். இவர் கூறும் கருத்து என்ன? இயேசு தன்னைப் பற்றிய சில பெருமைக்குரிய உண்மைகளைத் தடை செய்தார் என்று சொல்லப்படும் கருத்துக்கள், நற்செய்தியாளர் புகுத்தியுள்ள ஒரு தனிப்பட்ட வடிவமைப்பே!

***எந்தக் காரணத்திற்காக நற்செய்தியாளர் இப்படிப்பட்ட தடைகளைத் தன் நற்செயதி நூலில் புகுத்த வேண்டும்?***

முதல் நூற்றாண்டின் 65வது ஆண்டில் தான் மாற்கு தன் நற்செய்தியை எழுதினார் என்பது வரலாறு. அவர் எழுதிய கால கட்டத்தில் மக்கள் படிப்படியாக நமக்காக பாடுபட்டு, மரித்து மீட்பளித்த இயேசுவை மழுங்கடித்து விட்டனர். மாறாக புதுமைகள் செய்த இவரை, பேய்களை ஓட்டிய இயேசு, அரசியலில் தனது அதிகாரத்தை நிலை நாட்டிய இயேசு என ஒரு வெற்றி வீரனை மட்டுமே மனதில் கொண்டு வழிபடவும் பெருமையடையவும் தொடங்கினர்.

**தொடரும்......... நன்றி - விவிலிய விருந்து**

சென்ற இதழின் தொடர்ச்சி....

# விவிலியம் ஒரு குடும்பக் காவியம்

காயீன் தொட்டு நோவா வரை எல்லாத் தலைமுறையினரும் கடவுளைப் பிரிந்தவர்களாய் (தொ.நூ 3), தங்களுக்கள் பகைமையும் பொறாமையும் நிரம்பியவர்களாய், கடுஞ்சினம் உற்றவராய், வன்முறையில் மிகுந்தவராய் (தொ.நூ 4) வாழ்ந்து வந்தனர். அது மட்டுமன்றி "கடவுள் முன்னிலையில் மண்ணுலகு முழுதுமே சீர் கெட்டிருந்தத என்றும் மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடந்து வந்தனர் என்றும் கடவுள் உற்று நோக்கியதாகவும் (தொ.நூ6:11-12). ஆகவே மனிதர் எல்லாரையும் மண்ணுலகோடு அழிக்கப் போவதாகவும் (6:13), நோவாவிடம் அறிவிக்கிறார். "மண்ணுலகின் மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழை பெய்விக்கப் போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்துஅழித்தொழிப்பேன்" (7:4) என்று.

## ஞானப்பெற்றோரின் முக்கியத்துவமும் ஞானம் பற்றிய தெளிவான சிந்தனையும்



அருட் சகோ. எமர்சன் றாகல்,
மெய்யியல் பீடம்
தேசிய குருமடம்.
கண்டி

அறிவு பற்றி நாம் நோக்கும் போது. "சேகரிக்கப்பட்ட நம்பிக்கையுள்ள உண்மையான தரவுகள் அறிவு" என்று கூறலாம். எளிமையாக்குவோமெனில், நாம் எம் வாழ்நாளில் பலவகை அனுபங்களை பெறுகின்றோம். எம் புலன் சக்தியினால் பலவகை தரவுகளை சேகரிக்கின்றோம். சில தரவுகள் ஆழ்மனதில் பதிவு செய்யப்படுகின்றன. அதேவேளை சில தரவுகள் சிறிது காலம் ஞாபகத்தில் இருந்து பின் மறைந்து போகின்றன. இவ்வகை தரவுகளே எமக்கு அறிவை வழங்குகின்றன.

"அறிவு" இருவகையாக பிரிபடும்.

1. கோட்பாட்டு அறிவு, அதாவது நாம் "புத்தக அறிவு" எனக்கூறுவோம். உதாரணமாக, ஒரு வாகன ஓட்டுனர் வாகனம் ஓட்டுதல் பற்றியும் சட்டதிட்டங்கள் பற்றியும் வாகனங்கள் பற்றியும் அறிந்து கொள்ளுதல்.

2. செயன்முறை அறிவு, அதாவது புத்தக அறிவு மூலம் பெற்றுக் கொண்டவற்றை நாம் செயற்படுத்தல். உதாரணமாக. ஒரு வாகன ஓட்டுனர் வாகனத்தை வீதியில் செலுத்துதல்.

எனவே, இவ்விரண்டும் ஒரு மனிதனுக்கும் அவசியம். செயன்முறை இல்லாத கோட்பாட்டு அறிவும் வீண். அதேபோல் கோட்பாட்டு அறிவு இல்லாத செயன்முறை அறிவும் வீண். இவை இரண்டும் ஒருங்கிணைந்து பயனிக்க வேண்டும்.

"அறிவு" எனும் போது "சேகரிக்கப்பட்ட தரவுகள்" என்று நாம் பார்த்தோம். இவ்வகை "சேகரிக்கப்பட்ட தரவுகள்" முதன்மையாக உண்மையானதாக இருக்க வேண்டும். பின்பு உண்மையானதாக இருக்கிறது என நாம் நம்ப வேண்டும். பின்பு அதனை என்னால் நிரூபிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். உண்மை தன்மை, நம்பிக்கை, நிரூபனம் ஆகிய மூன்று அம்சங்களை கொண்டதே அறிவு கூர்மையான தரவுகள் என எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும். (Knowledge is justified true belief)

நம்பிக்கை ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபட்டது. "தனி மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை" நாம் நம்பிக்கை என மெய்யியல் கண்ணோட்டத்தில் கூறுவோம். இதன்போது, நாம் கவனிக்க வேண்டியது அறிவு மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும். அதேபோல் அதனை நிரூபிக்க ஆதாரங்கள் இருக்கும். ஆனால் நம்பிக்கை மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை நிரூபிக்க சில வேளைகளில் ஆதாரங்கள் போதியதாக இருக்காது. இதற்கான சிறந்த உதாரணம், இறைவன் மீது நாம் கொள்ளும் அதீத நம்பிக்கை. எமது ஆழ் மனதில் நாம் ஏற்றுக்கொண்ட நம்பிக்கை முயற்சிகள் சிலவேளைகளில் பிறருக்கு முட்டாள்தனமான செயல்களாகக் கூட தென்படலாம். எனவே நம்பிக்கைக்குரிய விடயங்கள் தனிநபருக்கு உரித்தானது.

**தொடரும்..............**

## தலைமுறை தலைமுறையாய் பாவத்தில் உழல்வோமா? இல்லை அதை அறவே ஒழித்து, உண்மையில் உயர்வோமா?



இந்தப் பெருவெள்ள அழிவிலிருந்து நோவாவைக் காப்பதற்கான வழியையும் இறைவன் நோவாவிற்கு முன்னமேயே வகுத்துக் காட்டுகிறார் என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது (6:15-21). அதாவது. நம் தலைமுறையைச் சார்ந்தவர் அனைவருமே தீச்செயலில் ஈடுபட்டு, அதையே தம் வாழ்க்கை முறையாக ஆக்கிக் கொண்டாலும், அத்தகு பண்பாட்டுக்குள் வீழ்ந்து விடாதபடி நாம் நல்லவராய் வாழ முடிவு எடுத்து, பாவத்தை அறவே விட்டொழித்து, இறைவழியில் நடந்தால், நாமும் நம் குடும்பமும் காப்பற்றப்படும் என்பது உறுதி! இந்த உண்மையில் உயர்வதும் உறுதி என்பது தெளிவு!

நாம் மட்டும் அல்ல, நம் குடும்பத்தவரும், நம் குடும்பத்தவர் மட்டும் அல்ல, பிற உயிரினங்கள் அனைத்துமே குடும்பம் குடும்பமாகக் காப்பற்றப்படும் என்பதும் உறுதி!

தொடரும்..........

நன்றி - விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கின் வரலாறு - புனித அந்தோனியார் ஆலயம், மூதூர்



எமது மறைமாவட்டத்தின் 125வது ஜூபிலி ஆண்டை சிறப்பித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அதிமுமையும் பாரம்பரியமும் வாய்ந்த ஓர் பங்கை பற்றி, அதன் தற்போதைய நிலை, ஆரம்பகால நிலை என்பவற்றை இந்த இதழில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எல்லோருக்கும் எங்கள் ஊர் பிடிக்கும். எங்களுக்கு இன்னும் இன்னும் அதிகமாக...... ஏதோ ஒன்று இன்னும் சிலரை .ந்த ஊரில் பிடித்து வைத்திருக்கிறது, அது என்ன? கரடு முரடான மலைகள் அற்ற இடம், மகாவலி கங்கை பாய்ந்து வந்து வளம் சேர்க்கும் இடம், கடல் அலைகளால் தலாட்டப்படும் இடம், காடுகளும் கழனிகளும் ஆங்காங்கே காணப்படும் இடம், நாடு போற்றும் எழுத்தாளர்கள் பிறந்த மண், இறந்தும் வாழ்கின்ற மனிதர்கள் பிறந்த மண். இன்னும் விசுவாசத்தை இறுக்கப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஓர் சிறு கூட்டமேனும் வாழ்கின்ற இடம், எல்லாவற்றிற்கும் மேலாய் புனித ஜோசேப் வாஸ், கொன்சால்வேஸ் அடிகளார் கால் பட்ட மண். நிரந்தரமாய் எம் மக்களுடன் மைக்கல் டி மெல்லோ வாழ்கின்ற புனித மண்.



இதை எழுதத் தொடங்கும் போது அழுகை வரவில்லை கண்ணீர் வருகிறது. எம் மக்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாய் நினைத்து நினைத்து அழுத கண்ணீரின் தொடர்ச்சியா இது? எம் ஊரில் மகாவலி பாய்ந்து வந்து கடலோடு கலப்பது போல நினைவுகளின் அலைகள் இதயத்தில் பாய்ந்து கண்களில் வெளியேறுகின்றதா? நினைவுகளும் உணர்வுகளும் இல்லாதிருந்தால் நலமாக இருந்திருக்கும். எல்லா நினைவுகளும் என்னை உருக்கி என் இரத்தம் பேனா வழியே சிந்தியது. எம்முடைய ஊர் எவ்வாறு இருந்தது என அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணம் என்னுள் ஓடிக்கொண்டேயிருந்தது. இக்கால சந்ததியினர் அறியாத சிலவற்றையாவது சொல்ல வேண்டும். அவர்களது வாழ்க்கை. வாழ்விடம், கலாச்சாரம், தொழில், சமய நிகழ்வுகள், கல்வியறிவு இவ்வாறாக....

விசுவாசத்தை விதைத்த ஒரு சமூகம், கத்தோலிக்க வாழ்க்கை வாழ்ந்த சமூகம், அந்த மக்கள் வாழ்ந்ததாலேயே அந்த இடத்திற்கு "வேதத்தீவு" என்று பெயர் வரக் காரணமான சமூகம். 25இற்கு மேற்பட்ட கிராம மக்களுக்கு கல்வி அளித்த ஓர் சமூகம். படித்தவர்கள் என்று அறியப்பட்டவர்கள் வாழ்ந்த சமூகம். இன்று பல்வேறு காரணங்களால் வாழ்கின்ற நிலை சொல்லட்டுமா? ஒரு கதை சொல்லட்டுமா? ஒவ்வொரு இடத்தைப் பார்க்கும்போதும் அது ஒரு கதை சொல்கின்றது. சந்தோசமாக தொடங்கும் கதை அனைத்துமே சோகத்திலேயே முடிகின்றது எம் மக்களின் நிலை வலிந்து உருவாக்கப்பட்ட ஒன்றா? திட்டமிட்டு இடம்பெயரச் செய்யப்பட்டனரா? செய்யப்படுகின்றனரா? இப்போது எம்மோடு இருப்பது நினைவுகள் மட்டும் தான். அதை எம்மிடமிருந்து எவராலும் எடுத்து விட முடியாதல்லவா? அழித்துவிட முடியாதல்லவா?

மூதூரும் கத்தோலிக்கர்களும் என்னும் கதை இன்னும் ஓரிரு தசாப்தங்களுக்குத்தானா? முடித்து விட்டோம் என்று பெருமை கொள்ள தனித்து வாழ ஓர் சமூகம் காத்துக் கொண்டிருக்கின்றதா? ஆலய வளாகத்தை நெருங்கி வந்து விட்டவர்கள் எம் மக்களுக்குச் சொல்லும் செய்தி தான் என்ன? மறைக்கப்பட்ட மகான்கள் என்று ஓர் புத்தகம் வெளிவந்ததாக ஓர் ஞாபகம். மூதூரில் இருந்து விரட்டப்பட்ட கத்தோலிக்கர்கள் எனும் புத்தகத்தை எழுத வேண்டிய காலம் வருகின்றதா?

குழப்பத்துடன் மூதூரில் பிறந்தது முதல் இன்று வரை வாழ்ந்து வருகின்ற முன்னாள் அதிபர் 84 வயது நிரம்பிய அந்தோனி இராசேந்திரம் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். (இன்னும் சிலரிடம் பெறப்பட்ட தகவல்களும் இணைக்கப்பட்டுள்ளது.) "ஐயா நம்முடைய ஊரின் ஆரம்ப காலத்தையும் மக்களையும் பற்றிச் சொல்லுங்க?"

இந்தியாவின் தூத்துக்குடியிலிருந்து வந்தவர்களின் பரம்பரை தான் மூதூர் கிறிஸ்தவர்கள். நிரந்தரமாக இங்கு வசித்தவர்கள் இவர்கள்தான். பிற இனத்தவர்கள் வியாபாரத்திற்காக இங்கு வந்து சென்றுள்ளார்கள். வைராக்கியம் கொண்ட ஓர் கத்தோலிக்க சமூகம் இது. யாழ்ப்பாண கத்தோலிக்க வாணிபர்கள் குறிப்பாக மயிலிட்டி, தையிட்டி போன்ற இடங்களில் இருந்தும் வந்துள்ளார்கள். அதற்கான சான்றுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாண தையிட்டி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட காணி ஒன்று ஆலமரத்தடி சந்தியில் உள்ளது. (தற்போதைய சதொச நிலையத்திற்கு முன்பாக) அது பிற இனத்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உரியது அல்ல என்பதற்கான சான்றுகள் எம்மிடமிருந்தும் அதனை பெற்றுக் கொள்ள முடியவில்லை. மூதூரில் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அனைத்துப் பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்துள்ளார்கள்.

அனைத்து இடங்களிலும் பெரும்பாலும் கத்தோலிக்கர்களாயும் பெரும்பாலான சொத்துக்கள் அவர்களுடையதாகவும் இருந்தது. ஆலயத்திற்கு சொந்தமாக "சந்தானாள் புரவி" "அந்தோனியார் புரவி" என இரு வத்தைகள் இருந்தது. அநேகமான வத்தைகள் கத்தோலிக்கருக்குச் சொந்தமாக இருந்தது. செபமாலை ஆச்சி, ராசி. ஜோன் குரூஸ், செபஸ்டியான் போன்றவர்களுடையதைக் கூற முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் வத்தைகள் மிகப்பெரியவை. வரும்போது பனாட்டு, ஒடியல், பனங்குட்டான் பெட்டிகள், துணிகள் கொண்டு வருவார்கள். போகும்போது நெல், வைக்கோல், மட்பாண்டம் போன்றவற்றைக் கொண்டு செல்வார்கள். திருகோணமலைக்கான போக்குவரத்தும் இதில்தான். வெள்ளைக்காரர்கள் காலத்தில் Dockyard பகுதியில் (திருகோணமலை NAVY பகுதி) உள்ள கட்டிடங்களுக்கு செங்கல் கொண்டு சென்று வரும் போது கடைகளுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவார்கள்.

எமது மக்களின் தொழில்களாக குடிசைக் கைத்தொழில் (மட்பாண்ட உற்பத்தி) விவசாயம், சேனைப்பயிர்ச்செய்கை, கல் அறுத்தல், புகையிலைச் செய்கை, கல்வி கற்ற ஓர் சமூகமாகவும் அதில் பலர் அரச தொழில் புரிபவர்களாகவும் இருந்ததோடு ஆங்கிலக்கல்வியை அனேகமானவர்களுக்கு கற்பித்தவர்களும் இவர்களே. அனேகமானோர் கவிதை எழுதுபவர்களாகவும் தமிழ் பண்டிதர்களாகவும் இருந்தனர். "சந்தியாகாலை' என்று அழைக்கப்பட்ட இடத்தில் (புகையிலைத் தோட்டம்) பழைய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. புனித ஜோசேப் வாஸ் வருகை தரும் முன்னரே இங்கு ஆதிக்கிஸ்தவர்கள் வாழ்ந்துள்ளார்கள். இவ் ஆலய வளவு ஓர் பிற இனத்தவரால் கொடுக்கப்பட்டுள்ளது. எட்டு வருடங்களின் பின்னர் அவர் அவ்விடத்தை கோருகின்றார். தலைமைக்காரராக இருந்தவரால் ஆலயம் உடைக்கப்படுகின்றது. இது கண்டி இராச்சிய மன்னனுக்கு தெரிய வர அவர் ஓர் குழுவை அனுப்பி சமரசம் செய்து உடைத்தவர்களைக் கொண்டே ஆலயம் மீண்டும் அமைக்கப்படுகின்றது. புனித ஜோசப் வாஸ் மீது கொண்ட பற்றுக் காரணமாகத்தான் அரசன் இவ்வாறு செய்தான் என்று நம்பப்படுகின்றது.

இந்த இடத்தில் தான் 1706ம் வருடம் பங்குனி 24ம் திகதி ஜோசேப் வாஸ் அடிகளாருடனும், கொன்சால்வேஸ் அடிகளாருடனும் மூதூரைத் தரிசித்து மறுநாள் 25ம் திகதி இறைபதம் எய்திய அருட்பணி. மைக்கல் டீ மெல்லோவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கல்லறை மண் பல நோய்களை இன்றும் குணப்படுத்துகின்றது என்பதை பல சம்பவங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

புனித ஜோசேப் வாஸ் குழுவினர் வெல்வெரிக் குளத்தின் காட்டு ஓரமாக விளாங்குளத்தைக் கடந்து தம்பலகாமகத்தை அடைந்து சூரங்கல் ஊடாக வேதத்தீவு நோக்கி வரும்போது டி மெல்லோ அடிகளாருக்கு கால் இயலாமல் போக எருமை மாட்டில் ஏற்றி வெறுங்காலுடன் அனைவரும் வந்து சேர்ந்ததாக நம்பப்படுகின்றது




மூன்று ஆறுகளைக் கடந்து வந்த போதும் அவர்களுக்கு எந்தவித தீங்குகளும் நேரவில்லை. அனைத்து வளங்களும் பொருந்திய இடமாக வேதத்தீவு இருந்துள்ளது. 50இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சேனைப்பயிர் செய்து கொண்டு வசித்து வந்துள்ளார்கள். சென்ற மாதம் புனித ஜோசேப் வாஸ் பயன்படுத்திய சிலுவை எமது மறைமாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டதும் வேதத்தீவில் புனித ஜோசப் வாஸ் ஆலயம் அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் எம் மக்களுக்கு ஓர் நற்செய்தியாகும்.

டச்சுக்காரர்கள் இலங்கைக்கு வந்த பின்னர் 1697ம் ஆண்டு மூதூருக்கு வருகை தந்த முதற் குரு அருட்திரு கர்வாலியே அடிகளார் ஆவார். 1865ம் ஆண்டு அமல மரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்திரு மெஸ்சியே அடிகளார் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஓர் புதிய ஆலயத்தை அமைத்து முன்பகுதியில் பாடசாலையையும் நிறுவினார். அப்போது அமைக்கப்பட்ட ஆலய முகப்பை தற்போதும் காண முடியும். மூதூர்ப் பங்காக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 1912ம் ஆண்டு அருட்தந்தை சாள்ஸ் பொனல் முதல் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார்.



31.08.1916ம் ஆண்டு பங்குக் குருவாக கடமையேற்ற அருட்தந்தை லாசறஸ் அடிகளார் தான் கிராமத்தின் எல்லைப் பகுதியில் பாடசாலையை அமைத்தால் கிராமம் அபிவிருத்தியடையும் எனும் நோக்கத்தில் தற்போது புனித அந்தோனியார் பாடசாலை அமைந்துள்ள இடத்தில் பாடசாலையை மாற்றியமைத்து 1928ம் ஆண்டு மாசி மாதம் 02ம் திகதி காணிக்கை மாதா திருநாள் அன்று பாடசாலை திறக்கப்பட்டுள்ளது. 153இற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக எமது பாடசாலை மக்களுக்கு கல்வியறிவூட்டி வருகின்றது. அதனை பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



ஆலய வளாகத்திற்கு அருகில் புனித தெரேசா கன்னியர் மடம் அமைந்துள்ளது. இக்கன்னியர் மடம், வறுமை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு பாதுகாப்பு, தங்குமிடம், கல்வியறிவு போன்றவற்றை வழங்கி வருகின்றது. இங்கிருக்கும் அருட்சகோதரிகள் ஆன்மீக கல்வி செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து தங்களது அளப்பரிய சேவையினை எமது மக்களுக்கு வழங்கி வருகின்றார்கள்.

எமது ஆலயத்தில் பாஸ்கு கால நிகழ்வுகள் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டு கூறும்படியாக இருக்கும். விபூதிப்புதன் தொடக்கம் 40 நாட்கள் நோன்பு நோற்பதில் மிகக்கடுமையாக இருந்தது இந்தச் சமூகம். ஒவ்வொரு நாளும் அனைத்து வீடுகளிலும் பசான் சத்தம் கேட்கும். ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து வாசிப்பார்கள். பெரிய வியாழக்கிழமை எழுந்தேற்றப்பீடம் தனியாக விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும். பிரசங்கங்கள் ஒழுங்காக வாசிக்கப்படும். மணி அடிப்பது நிறுத்தப்பட்டு "துக்கப்பறை" சுத்தப்படும். கிழக்குப் பிரதேசத்தில் மூதூரில் உள்ளது போல் எங்கும் வாசிப்பது இல்லை. பக்தியைத் தூண்டுவதாக இருக்கும். வாசிப்பதில் பெயர் பெற்ற மதிப்பிற்குரியவர்கள் சிலரின் பெயர்கள் : அதிரியான் விசேந்தி, செலஸ்ரீன், செபஸ்தியான், அந்தோனி துரம், மனு மிக்கேல், அகுஸ்தீன் குரூஸ், எஸ்தோ கொரேரா, யேசுதாசன் போன்றவர்கள் என்னுடைய அனுபவத்தில் உணர்ந்தவர்கள். பாரம்பரிய முறையைப் பின்பற்றி வாசிக்கும் சமூகம் இப்பொழுதும் மூதூரில் உள்ளது. இது தொடர்ந்து இருக்க வேண்டும்.

தொடர்ச்சி 09ம் பக்கத்தில் ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08ம் பக்கத் தொடர்ச்சி ....................பங்கின் வரலாறு - புனித அந்தோனியார் ஆலயம் மூதூர்

திருக்காட்சி காட்டப்படும் கல்லறை ஆண்டவர் சுரூபம் 200 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. கடலில் மிதந்து வந்து கண்டெடுத்ததாக கூறப்படுகின்றது. ஒரு சில ஆண்டுகளைத் தவிர தொடர்ந்து அறைந்து இறக்கப்படுகின்றது. விசேடமாக பசான் வாசிப்பதற்கு ஏற்ப மரணம், அடக்கம் என்பன ஒழுங்காக காட்சியாக காண்பிக்கப்படுகின்றது.

பிரசங்கத்திற்கு பிறகு "சிந்தாகுல திரட்டு" எனும் நூலில் இருந்து ஆண்டவரின் பாடுகள் தொடர்பான நிகழ்வுகளைப் பாடுவார்கள். விருத்தப் பாடகர்கள் அநேகர் இருந்தனர். மூதூரில் பாஸ்கு நிகழ்வை சிறப்பாகச் செய்கிறார்கள் எனும் கருத்து அகில இலங்கை ரீதியாக உள்ளது.

புனித அந்தோனியார் வருடாந்த திருவிழா மிகச் சிறப்பானதாக இருக்கும். மாதம் முழுவதும் நடைபெறும். கெங்கையில் வாழ்ந்த சகோதரமொழியினருக்கும் ஒரு நவநாள் கொடுக்கப்பட்டு விசேடமாக சிறப்பிக்கப்படும். ஊர்மக்கள் இணைந்து அன்னதானம் கொடுப்பார்கள்.

மறக்க முடியாத நிகழ்வாக அந்த நாட்களில் 10 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு தான் கால் கழுவுவது, நிகழ்விற்குப் பின்னர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் பிஸ்கட், பழம் பகிர்ந்து கொடுப்பார்கள்.

1913ம் ஆண்டு ஒரு தடவை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக தனது தந்தையார் கூறியதாக அந்தோனி இராசேந்திரம் அவர்கள் கூறினார். 1957ம் ஆண்டு வெள்ளப்பெருக்கில் ஆலயம் மாத்திரம் தான் மூழ்கவில்லை என்றார். ஏன்? என்று கேட்டேன் அது விசேடத்திலும் விசேடமாகும் பின்னர் மக்கள் கடற்கரையிலே தஞ்சமடைந்தனர். '"Wijeya" எனும் போர்க்கப்பல் மூலம் மக்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். அந்த நாட்களில் வெளிவந்த பத்திரிகைகளாக ஈழநாடு, தினபதி, சுதந்திரன், தினகரன், வீரகேசரி போன்றவற்றைக் கூறலாம். மூதூர் வாழ் கத்தோலிக்கர்கள் ஏராளமான ஆக்கங்களை எழுதியுள்ளனர். குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களுள் சாகித்திய விருது பெற்ற கலாபூசணம் வ. அ. இராசரெத்தினம் அவர்கள் ஒருவர். பத்திரிகைகளை வாங்குவதற்கு மக்கள் வரிசையாக நிற்பார்கள்.

1983ம் ஆண்டு கலவரத்தின்போது மூதூரில் பெரிய அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. 1985ம் ஆண்டு முதலாவது இனக்கலவரம் தொடங்கியது. மூதூரின் இன்றைய நிலைக்கு இதுதான் ஆரம்பம். அன்றே பல கத்தோலிக்க குடும்பங்கள் உடமைகள் சேதமாக்கப்பட்டது. மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கு தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யுத்த காலத்தில் தவிர்க்க முடியாத காரணத்தினால் சிலர் அதில் இணைந்து செயற்பட்டதாலும் அது சார்ந்த குடும்பங்கள் பயம் காரணமாகவும் தமது இடங்களை விற்பனை செய்தனர். இனம் சார்ந்த நெருக்குதல்கள் மிகவும் அதிகமாக இருந்தது. எம் மக்களின் காணிகளை வாங்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. இன வன்முறைகளைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மக்கள் இயலாமையினால்தான் இடம்பெயர்ந்தார்கள். அக்கிரமங்களைத் தாங்க முடியாமல் தான் குறைந்த குறைந்த விலைக்கு காணிகளை கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

ஒருமுறை இருமுறை அல்ல. மூதூரைச் சுற்றி எப்பகுதியில் எது நடந்தாலும் உடனே நேரடியாக பாதிக்கப்படுபவர்கள் மூதூர்க் கத்தோலிக்கர்கள் தான். பிறமத மக்கள் மூதூரிலிருந்து முழுவதுமாக கத்தோலிக்கரை விரட்டி அடிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு செயற்பட்டார்கள். செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமைக்கு எம் மக்களில் ஒரு சிலரும் காரணமாக இருக்கின்றார்கள் என்பது தான் சோகமானது. படித்தவர்கள், பரம்பரையாக விசுவாசத்தில் வாழ்ந்தவர்கள், அடையாளங்களை முழுவதுமாக அழித்துவிடுவதா? பாதிக்கப்படுவது எம் ஆலயமும் அயலில் உள்ள சொந்தங்களும் என்பதை உணரவில்லையா? உரக்கத்தானே கத்தினோம்... கேட்கவில்லையா? காதிருந்தும் செவிடர்களாய்... கண் இருந்தும் குருடர்களாய்... அறிவிருந்தும் மடையர்களாய்... வாழ்ந்தாலும் உணர்வில்லையா? விசுவாசமில்லையா? சொந்தங்களில்லையா? நடந்து வந்த பாதையை மறந்துவிட்டால் தொடர்ந்து செல்லும் பாதை தெளிவாகத் தெரியாமல் போகலாம்!

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். எமது மறைமாவட்டத்திற்கு தங்கள் காணியினை அன்பளிப்புச் செய்தவர்களுக்கும் குறைந்த விலைக்கு விற்பனை செய்தவர்களுக்கும், இவ்வாறு செய்து எம் மக்களையும் மறைமாவட்டத்தையும் அன்பு செய்யக் காத்திருக்கும் அனைவருக்கும், தகவல்களைத் தந்துதவிய மதிப்பிற்குரிய அந்தோனி இராசேந்திரம் ஐயா அவர்களுக்கும், திரு. திருமதி பீற்றர் திலீப்குமார் அவர்களுக்கும் மூதூரில் வாழ்கின்ற கத்தோலிக்க மக்களுக்கும் எமது நன்றிகள். இறுதியாக, இந்த யுத்தம், இனக்கலவரம் வராமல் இருந்திருந்தால்... இடம் பெயர்வுகள் இருந்திருக்காது. இழப்புகள் இருந்திருக்காது. எப்படி இருந்திருக்கும் எம் ஊர்! பொன் ஊராக, உண்மையான முத்தூராக கத்தோலிக்கர்கள் நிறைந்த எம் மக்களால் சூழப்பட்ட ஓர் பிரதேசமாக இருந்திருக்கும். இப்போது எம்மோடு இருப்பது பழைய நினைவுகள் மட்டும்தான். அதை எம்மிடமிருந்து எவராலும் எடுத்துவிட முடியாது, அழித்துவிட முடியாது.

## பங்கில் இருந்து உருவான அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகள்


அருட்பணி நீக்கலஸ் கிறிஸ்ரியன் அருள்வரதன்


அருட்பணி இராசரெட்ணம் ஒகஸ்ரின் நவரெட்ணம்


அருட்பணி செபமாலை சுகுனேந்திரன் குரூஸ்


அருட்பணி. பெனடிக் இயூஜின் அமதி


அருட்பணி பிரான்சிஸ் சேவியர் ரஜீவன்


அருட்பணி செபமாலை மதுராங்கன் குரூஸ்


அருட்பணி சீவரெத்தினம் ஜெயரெட்ணம்


அருட்பணி அன்ரனி ஜென்சன் லொய்ட்


அருட்சகோதரி மேரி மிக்கேலியா


அருட்சகோதரி ஜே. மகேஸ்வரி


அருட்சகோதரி எஸ். மரிய சுகிர்தா குரூஸ்


அருட்சகோதரி எஸ். பேர்னடேற் மாக்ரேற்

திரு.நா.சுரேஸ்
திரிசூடம்,
மூதூர்.

## குழந்தை இயேசு ஆலய புனித வின்சன்ட் டீ பவுல் சபை

2018.09.27 அன்று புனித வின்சனட் டீ பவுல் விழா தினத்தன்று குழந்தை இயேசு ஆலய புனித வின்சனட் டீ பவுல் சபை கொடி வாரத்தையும் சபையின் 400வது ஆண்டுகள் நினைவையும் மையப்படுத்தி எமது பங்கில் அமைந்துள்ள புனித வின்சன்ட் டீ பவுல் கட்டடத் திறப்பு விழாவை சிறப்பித்தது.

குழந்தை இயேசு ஆலயப் பங்குத்தந்தை தலைமையிலும் தலைவர் அன்ரூ கோல்சீன் அவர்களின் வழிநடத்தலிலும் புனித வின்சன்ட் டீ பவுல் சபையின் தினத்தையொட்டிய கூட்டுத் திருப்பலி எமது பங்குத்தந்தை அருட்பணி சுகுனேந்திரன் குரூஸ் அடிகளார், மண்ணின் மைந்தன் அருட்பணி சகாய ஜோன்பிள்ளை அடிகளார், இயேசு சபை அருட்தந்தை அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளார் ஆகியோருடன் மிகவும் பக்திபூர்வமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மறைமாவட்ட புனித வின்சன் டீ பவுல் சபையின் தலைவர். V. A. S. டேவிட், துணைப்பங்கான இலிங்கநகர் ஆலோசனைச் சபை அங்கத்தவர்கள், குழந்தை இயேசு ஆலய புனித வின்சன் டீ பவுல் சபை அங்கத்தவர்கள், இறைமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருப்பலியின் பின்னர் கொடி தினத்தை முன்னிட்டு தலைவரினால் பங்குத்தந்தைக்கு முதல் கொடி அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து பங்குத்தந்தையால் புனித வின்சன்ட் டீ பவுல் ஆலோசனைச் சபைக்கு கொடி அணிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உத்தியோக பூர்வமாக புனித வின்சன் டீ பவுல் கட்டடம் மண்ணின் மைந்தன் அருட்பணி சகாய ஜோன்பிள்ளையினால் ஆசீர்வதிக்கப்பட்டு, பால் பொங்கி, வருகை தந்திருந்த அனைவருடனும் சிற்றுண்டி பகிர்ந்து மகிழ்வுடன் நிறைவுற்றது.

தகவல் :
சபையின் விளம்பரப் பொறுப்பாளர்,
திருமதி. சந்திரகாந்தன்

புகைப்படம் 12ம் பக்கத்தில்....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியைக் காணவே.........

Fr. NC

- கவிதை வரிகளை சரியாக வடிவமைக்கும் போட்டி
- இதோ கவிதையின் சரியான வடிவம்

- வாழ்விலே உயர்வினைக் கண்டடைய
- வழிகளே பரந்து நிறைந்துள்ளதே
- எவ்வழியாயினும் நல்வழி நமதே
- நீதியை மறவாது நியாயத்தை உணர்ந்தே
- உண்மைக்காய் வாழ்வதே உயர்வாகும்
- இடையூறு தடைகள் எது வந்தாலும்
- முன் வைத்த காலை பின் வாங்கி விடாமல் தொடர
- வெற்றியின் களிப்பிலே நிலைப்பது உறுதியே
- நல்வளந்தேட நல்லதையே காண்போம்.

பங்கு கொண்டோர் : 18 பேர்
சரியாக வடிவமைத்தவர் : ஒருவர் மட்டுமே

R. K. டினிஷ் கிரேஷியன்
பேராலயம்

பங்கு கொண்ட அனைவருக்கும் பாராட்டுக்கள்

## நன்மைகள் மலர வேண்டும்

அருட்பணி. என். சி. அருள்வரதன்

நாட்டினை
வாட்டிடும்
நெறிகெட்ட செயல்கள்
காட்டு மிராண்டிகளாய்
காடையரின் அகோரங்கள்

அமைதி சமாதானம்
அன்புநிலை மறைந்து போக
ஆணவங்கள் அதர்மங்கள்
அகோர நிலைகள் ஓங்கியே
பாதகங்கள் பெருகுவதால்
பழிநிலையே தெரிகிறதே

கற்கும் மாணவர்க்கு
கல்விக்கு இடையூறு
வீட்டிலும் வீதிகளிலே
பெருவாரி அநீதிகள்
யாரைக் கேட்பது
யாரிடம் கேட்பது

நீதியே நீ மறையாமலே
நிலை கொள்ள வேண்டும்
வன்முறையின் காரணிகள்
மறைந்து விட முடியாமல்
உண்மைகள் வெளிப்பட்டே
ஆக வேண்டும்

அதர்மங்கள்
அடக்குமுறைகள்
குழி தோண்டிப் புதைக்கப்பட்டு
நீதியே உயர்ந்து நிற்கும்
நிலையான உண்மை வேண்டும்

உண்மை மறையாத
உயர்வான வாழ்வும்
இன்முகங்கொண்ட
இனிய நல்லுறவுகளும்
வாழ்வுக்குத் தேவை இதை
மறந்து விட வேண்டாமே

## குட்டிக்கதை

Fr. NC

ஒரு ஊரிலே ஒருவர் இருந்தார். அவர் எப்படிப்பட்டவரென்றால் யாராவது பிழை விட்டால், உடனே வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுவார். அது யாராக இருந்தாலும் பிழை என்றால் பிழை என்பதை வெளிப்படுத்தி விடுவார்.

இன்னுமொருவர் இருந்தார். அவர் செய்வது என்னவென்றால் பிழை செய்யத் தூண்டுவது. அது சிறுபிள்ளைகள் என்றாலும் பெரியவர்களென்றாலும் பிழை செய்யத் தூண்டுவதே இவரது வேலை.

உண்மையில் பிழை என்றால் அதை பிழை என்று காட்ட வேண்டும். ஆனால் பிழை செய்யத் தூண்டுவது மிகவும் பிழையானதென்பது உண்மை அல்லவா?

## இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவுநாள்



நவம்பர் மாதம் என்றாலே கல்லறைத் தோட்டங்கள் எல்லாம் அழகு செய்யப்படுகின்றன. புதர் மண்டிப்போய் கிடந்த கல்லறை எல்லாம் மீண்டும் புதுப்பொலிவுடன் தோற்றம் தருகின்றன. கல்லறைகளைச் சுத்தம் செய்து வெள்ளையடித்தல், கல்லறைகளைச் சந்தித்தல், இறந்தவர்களுக்கான திருப்பலி நிறைவேற்றுதல், இறந்தவர்களை நினைத்து சிறப்பு அன்னதானம் வழங்கல்..... இப்படியாக பல்வேறு நிகழ்ச்சிகளால் கார்த்திகை மாதம் முக்கியமானதாக அமைந்து விடுகின்றது.

ஏன் இந்தக் கொண்டாட்டங்கள், ஏன் இந்த ஆர்ப்பரிப்பு? எதற்காக நாம் இறந்தவர்களை நினைவு கூறுகின்றோம்? அனைத்து ஆன்மாக்களின் நினைவு தினம் எமக்கு எதைக் கற்றுத் தருகின்றது?

மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் இறப்பைச் சந்தித்தே ஆக வேண்டும். மரணம் எனக்கு வேண்டாம் என்று தப்பித்துக் கொள்ள முடியாது. மாறாக அனைத்து உயிர்களும், அதிலும் குறிப்பாக ஒவ்வொரு மனிதரும் சந்தித்தே ஆகவேண்டியது வாழ்வின் எதார்த்தம்.

ஆகவே நவம்பர் மாதம் 2ம் திகதி அனைத்து ஆன்மாக்களின் நினைவு நாளாக, அதாவது இறந்தோர் தினமாக திருச்சபை சிறப்பித்து வருகின்றது. பாமர மக்கள் இதைக் கல்லறைத் திருநாள் என்று அழைக்கின்றனர். இவ்விழா எவ்வாறு வழக்கத்திற்கு வந்தது?

தொடக்க திருச்சபையின் வாழ்வு மிகவும் போராட்டம் நிறைந்த வாழ்வாக அமைந்திருந்தது. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமையில் அவ்வப்போது ஏற்பட்ட வேத கலாபனையில் பலரும் இயேசுவுக்கு சாட்சியாக இறந்தனர். மிகக்குறிப்பாக திருச்சபையின் இருதூண்கள் எனப்படும் புனித பவுல் மற்றும் புனித பேதுருவின் கல்லறைகள் மக்களிடையே விரும்பிச் சந்திக்கப்பட்ட இடங்களாக மாறின. காலஞ் செல்லச் செல்ல மறைசாட்சிகளாக இறந்த இவர்களின் கல்லறைகளில் கி. பி 3ம் நூற்றாண்டுக்குப் பின் திருச்சபை உரோமையில் வேரூன்ட ஆரம்பித்த பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சாட்சிய வாழ்வை நினைவு கூர்ந்து மக்கள் விழாக் கொண்டாடி அவர்களின் கல்லறைகளை சந்தித்து வந்தனர்.

வேதக்கலாபனைகளில் மறைசாட்சிகளாக இறந்தவர்களை ஒட்டுமொத்தமாக அடக்கம் செய்யும் பழக்கமும் இருந்தது. திருத்துதர்களின் கல்லறைகள் போன்றே அவர்களின் கல்லறைத் தோட்டங்கள் காலப்போக்கில் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாகவும் மாறின. இதற்கு சிறந்த உதாரணம் திருத்தொண்டராக இருந்து மறைசாட்சியாக மரித்த புனித லோரன்ஸ் என்பவரின் இடத்தில் இன்றும் அவரின் பெயரில் ஆலயம் உள்ளது. மக்கள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான வகையில் இங்கு திருப்பலி நிறைவேற்றி மறைசாட்சிகளாக இறந்தவர்களை நினைவு கூறுகின்றனர். இருப்பினும் இக்கல்லறை விழா உலகத் திருச்சபை அளவில் கொண்டாடப்படும் விழாவாக இருக்கவில்லை.

கி. பி 998இல் புனித ஓதிலோ என்பவர் தன்னுடைய குளூனி சபையினருக்கு இதனை அறிமுகப்படுத்தினார். இவர் குளூனி சபையின் முதல் மடாதிபதியாக இருந்தார். தன்னுடைய துறவற மடத்தில் வாழ்வோர் இறந்தவர்களுக்காக சிறப்பான செபங்களை செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விழாவை அறிமுகப்படுத்தினார்.

11ம் நூற்றாண்டில் இறந்தவர்களுக்காக மன்றாடும் குளூனி சபையினரின் வழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிக விரைவாகப் பரவியது. இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் இவ்விழாவைத் தாய் திருச்சபை கி. பி 13ம் நூற்றாண்டில் அனைத்துலகின் விழாவாக கொண்டாட அனுமதி வழங்கியது.

நன்றி - இணையம்

## புனிதர் அனைவர் பெருவிழா

புனிதர் அனைவர் பெருவிழா என்பது கத்தோலிக்க திருச்சபை முதலிய பல மேற்கு கிறிஸ்தவ திருஅவைகளில் நவம்பர் 1 அன்றும் கிழக்கு திருஅவைகளில் தூய ஆவி பெருவிழாவுக்கு அடுத்து வரும் ஞாயிறு அன்றும் கொண்டாடப்பட்டு வந்த இத்திருநாள் எட்டாம் நூற்றாண்டில் திருத்தந்தை 03ம் கிறகோரியின் காலத்தில் நவம்பர் முதல் தேதியன்று கொண்டாடப்பட்டது. திருச்சபையால் புனிதர் பட்டம் அளிக்கப்பட்ட புனிதர்கள் பலர் இருக்கும் போதிலும் இவ்வகை அங்கீகாரம் பெறாமல் புனித வாழ்வு வாழ்ந்த பலரை நினைவு கூறும் வண்ணம் இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

இறைவனுக்காக தன் உள்ளத்தையும் உடலையும் அர்ப்பணித்துத் துன்பங்களை இன்பங்களாக ஏற்று வாழ்ந்து மறைந்த தூயவர்களைத்தான் புனிதர்களாக அடையாளப்படுத்துகிறது கத்தோலிக்கத் திருஅவை.

திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் திருச்சபையால் வந்திக்கப்பட்ட புனிதர்கள் அனைவரும் வேதசாட்சிகளே. வேதசாட்சிகளிலும் அனைவரது விழாக்களும் தனித்தனியாக கொண்டாடப்படுவதில்லை. வேதசாட்சிகளைத் தவிர ஏராளமான புனிதர்களும் மோட்சத்தில் புனிதர்களாக பேரின்ப பாக்கியம் அனுபவித்து வருகிறார்கள்.

நவம்பர் 1இல் நாம் மோட்சத்தில் இருக்கும் புனிதர் அனைவரையும் நினைவு கூர்கின்றோம். அவர்களது மகிமையையும் மாட்சியையும் திருச்சபை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. புனிதர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல. எண்ணமுடியாத வேறு நீதிமான்களையும் நாம் காண்கின்றோம். அவர்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாழ்கிறார்கள். அவர்கள் கடவுளைப் புகழ்கிறார்கள். கடவுளுடைய செம்மறியானவரையும் அவர்கள் வாழ்த்துகிறார்கள். இந்த சகோதரர்களுடன் நாமும் கூடி மகிழ்வோம். புனிதரின் உறவு ஒன்றிப்பால் இவர்களுடன் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். மோட்சத்திலிருக்கும் புனிதர்களுடன் தேவபயத்தடன் வாழ்வதுடன் கடவுளது கட்டளைகளை அனுசரித்து நடக்க வேண்டும். எளிய மனத்தோராய் சாந்த குணம், வேதனைகளில் பொறுமை, நீதி, அனுதாபம், கற்பு, துன்பங்களில் சகிப்பு என்னும் புண்ணியங்களை அனுசரிக்க வேண்டும். நமது உழைப்புக்களிலும், பிரச்சினைகளிலும் இயேசுவிடமே இளைப்பாற்றி காண வேண்டும்.

இயேசுவின் சீடரான புனித இராயப்பர் தொடங்கி இன்றுவரை வாழ்ந்து மறைந்தவர்கள் புனிதர்களாக நம்மோடு இன்றும் வாழ்கிறார்கள். நமக்காக செபிக்கிறார்கள். நமக்காக பரிந்து பேசி அரும்அடையாளங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தன் வாழ்நாளெல்லாம் செபத்திலேயே கழித்த தெரேசாள் இறப்பதற்கு முன்பு "என்பணி இனிமேல்தான் ஆரம்பமாகிறது" என்று கூறி விண்ணகத்தில் உலக மக்களுக்காக பரிந்து பேசி செபிக்கப்போவதாக அறிவித்துச் சென்றாள்.

என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கின்ற எவரும் வாழ்வடைவர். (மத்தேயு 16:25) என்ற இறைமகன் இயேசுவின் வாக்குக்கு உண்மை சாட்சியாக நின்ற அன்னை மரியாள், புனித சூசையப்பர், இன்னும் பல புனிதர்களின் பெயரைச் சொல்லி "எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று அவர்களிடம் செபங்கள் மூலமாக கேட்கின்ற போது இறைவனிடம் நாள்தோறும் பரிந்து பேசுகின்றார்கள்.

நாம் புனிதர்களுக்குச் செலுத்தும் வணக்கம் வெறும் மரியாதை மட்டுமன்று அல்லது வேளா வேளைக்கு எழுப்பும் சிறு சிறு மன்றாட்டு மட்டுமன்று மாறாக ஆழ்ந்த அடிப்படையில் அமைந்த ஞான உறவு என்று திருத்தந்தை 23ம் யோவான் கூறியுள்ளார்.

நாம் எல்லோருமே நமது நற்செயல்களின் வழியாக இறைவனின் விண்ணரசில் உரிமைப் பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளை வழிபடுகின்ற நாம் அவரோடு நெருங்கிய உறவு கொண்டு நமக்காக பரிந்து பேசுகின்ற புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது நமது கடமை.

நன்றி - இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

## புனித மாற்குவின் சின்னம்

❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
❖ 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=



பெயர் ..............................

முகவரி ..............................

பங்கு ..............................

தரம் ..............................

முடிவுத் திகதி 25.11.2018

## இவ்வாண்டுக்கான சிறப்புப் போட்டி

## இறைவார்த்தைப் புதையல் போட்டி - 03

### புனித மாற்கு நற்செய்தி

### 9- 16 அதிகாரங்கள்

❖ எல்லோரும் பங்குபற்றலாம்.
❖ அதிகாரம். வசனத்தை மட்டும் எழுதுக.

01. உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்
விடை : ..............................

02. என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும்.
விடை : ..............................

03. பிள்ளைகளே, செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்.
விடை : ..............................

04. "தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என்று இன்னும் உரக்கக் கத்தினார்
விடை : ..............................

05. நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள். ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள்.
விடை : ..............................

06. மானிடமகன் இறந்து உயிர்த்தெழும்வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது.
விடை : ..............................

07. எனது பெயரின் பொருட்டு எல்லோரும் உங்களை வெறுப்பர். ஆனால் இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர்.
விடை : ..............................

08. ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினர்.
விடை : ..............................

09. அவரை விடுங்கள், ஏன் அவருக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே.
விடை : ..............................

10. இவை நிகழ்வதைக் காணும் போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.
விடை : ..............................

பெயர் :..............................

பங்கு :..............................

முகவரி :..............................

முடிவுத்திகதி : 25. 11. 2018

## மறைக்கல்வி கற்போம்

**01. திருவிவிலியம் தமிழில் எப்போது பொது மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது?**
1995ம் ஆண்டு மதுரையில்

**02. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**
பக்தன், குறிசொல்வோன், மந்திரவாதி. ஆவேசம் கொள்பவன்

**03. மனிதன் தன் மனைவிக்கு "ஏவாள்" எனப் பெயரிட்டான்.**
அப்பெயரை வைத்ததன் காரணம் என்ன?
உயிருள்ளோர் அனைவருக்கும் அவளே தாய் என்பதால்

**04. திருச்சபை தன் தூதுரைப் பணியினை இலகுவாக மேற்கொள்ள அதற்கு கொடுக்கப்பட்டுள்ள அருட்கொடை யாது?**
ஆளும் வரம், வழுவா வரம் என்பவையே சிறப்பு அருட்கொடைகள்

**05. திருச்சபை முடிவின்றி என்றும் நிலைத்திருக்கும் என்பதன் பொருள் என்ன?**
கிறிஸ்து திருச்சபையை நிறுவிய முறையிலேயே அது உலக முடிவு வரைக்கும் எக்காலமும் நிலைத்திருக்கும் என்பது தெளிவாகின்றது.

**06. திருச்சபை எந்த சந்தர்ப்பங்களில் வழுவா வரம் கொண்டதாயிருக்கிறது?**
திருத்தந்தை தனியாகவோ ஏனைய ஆயர்களுடன் இணைந்தோ மறையுண்மை மற்றும் ஒழுக்கம் சம்மந்தமான ஒரு பேருண்மையை முழு திருச்சபையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென பிரகடனப்படுத்தும் போதே அது வழுவா வரம் கொண்டதாயிருக்கிறது.


**07. "ஓசான்னா" என்னும் சொல்லுக்கு எபிரேயத்தில் பொருள் என்ன?**
விடுவித்தருளும்

**08. பொதுநிலையினரை மறைதூதுப்பணிக்காக பயிற்றுவிக்கும்போது ஆன்மீக அடிப்படையாக அமைய வேண்டியவை எவை?**
❖ பொதுநிலை மறை பரப்பாளன் படைப்பு , மீட்பு பற்றிய மறைபொருளில் விசுவாசம்
❖ திருச்சபையின் மறைபணிகளை நிறைவேற்ற கற்பித்தல்.

**09. "நான் சென்ம பாவமின்றி உற்பவித்தவள்" என்று மரியாள் எங்கே காட்சி கொடுத்த போது கூறினாள்?**
லூர்து நகரில் காட்சி கொடுத்த போது

**10. சிலுவை அடையாளம் வரைதல் எதைக் குறிக்கின்றது?**
கிறிஸ்தவ நம்பிக்கையை குறித்து குழந்தை ஒருபோதும் வெட்கப்படாமல் இருக்கவும் சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவை எப்போதும் அன்பு செய்ய வேண்டும் என்பதை.

## படித்ததில் பிடித்தது



தாமரைக் குளம்.
அங்கேயே பிறந்து வளர்ந்தது தவளை.
குளமே வாழ்வு. குளத்து நீரே உயிர் மூச்சு.
தாமரை இலை மேல் அமரும்.
பூ மேல் படுத்து உறங்கும். பகல் கனவு காணும்.
ஆனால்... அப்பூவிலிருந்த தேனை மட்டும்
அத் தவளை கண்டுகொள்ளவே இல்லை.
எங்கிருந்தோ பறந்து வந்தது ஒரு வண்டு.
ஒரு விநாடியில் தேனைக் கண்டுகொண்டது.
நிதானமாய்க் குடித்தது.
ஒய்யாரமாகப் பாடியபடி பறந்து சென்றது.
பார்த்த பக்கத்து மரத்துக் குயில் பாடியது:
'அருகிலிருக்கும் தேனின் அருமை
எங்கிருப்பவருக்கோ தெரிந்தது.
அங்கிருப்பவருக்குத் தெரியவில்லை..'

*உயிர் நண்பனின் உன்னத திறமைகள்*
*உனக்கு மட்டும் தெரியாது போவதேனோ...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இயேசு ஆலய

## புனித வின்சன்ட் டி பவுல் சபை





## புனித பட்ட சிறப்புத் திருப்பலி



திருத்தந்தை 6ம் பவுல், சான் சால்வதோரின் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ உட்பட ஏழு அருளாளர்களுக்கு புனித பட்டம் வழங்கும் சிறப்புத் திருப்பலியை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் தலைமையேற்று நடத்திய திருத்தந்தை, இயேசுவைத் தேடிச் சென்றவர், நிலை வாழ்வடைய விரும்பியதைப் போலவே நாம் ஒவ்வொருவரும் விரும்புகிறோம் என்பதை தன் மறையுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## உறவுப் பகிர்வு நிகழ்வு



*திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கண்டி கரித்தாஸ் செட்டிக் நிறுவனத்தின் IRF (Inter Religious forum) அங்கத்தவர்களினால் மூதூர் பட்டித்திடல் கிராமத்தில் உறவுப் பகிர்வு நிகழ்வானது 2018. 09. 28ம், 29ம், 30ம் திகதிகளில் நடைபெற்றது.*

**தகவல் : எகெட் கரித்தாஸ்**

## பாலையூற்று திருத்தல முதியோர் சங்க

## சுற்றுலா



புனித "சுவக்கீன் அன்னம்மாள்" முதியோர் சங்க உறுப்பினர்கள் கடந்த மாதம் 10, 11.09.2018 திகதிகள் 02 நாட்கள் மட்டக்களப்பு, கல்முனை மாவட்டத்தில் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

முக்கியமான திருத்தலங்கள் மற்றும் ஆலயங்களுக்கு சென்றதுடன் ஓசானம் இல்லத்திற்குச் சென்று விசேட தேவையுள்ள பிள்ளைகளுடன் தங்கள் உறவை பகிர்ந்து கொண்டது சிறப்பான விடயமாகும். இந்நிகழ்வுக்கு பக்கபலமாக இருந்து வழிகாட்டிய எம் பங்குத்தந்தை அருட்பணி க. நிதிதாசன் மற்றும் அருட்சகோதரிக்கும் எம் நன்றிகளும் பாராட்டுக்களும்.

**தகவல் :**
**முதியவர் சங்க தலைவர் B.. F. பார்த்லட்**

## சிறுவர் தின நிகழ்வு






திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்துடன் மூதூர் சிறுவர் மேம்பாட்டுக்குழு (VCDC) அங்கத்தவர்கள் இணைந்து, யுனிசெப், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் சிறுவர் தின நிகழ்வானது 01.10.2018 அன்று சம்புஸ்ரீ கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர், சம்பூர் பிரதேச சபை உறுப்பினர், சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சிறுவர் நன்னடத்தை, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுடன் இணைந்து அதிபர், ஆசிரியர்கள், சிறுவர் கழக அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

**தகவல் : எகெட் கரித்தாஸ்**


## நாம் பாவிகள் எனினும் நம் தாயாம் திருஅவை புனிதமானவர்



திருஅவையின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் பாவிகள் எனினும், நம் தாயாம் திருஅவை, புனிதமானவர் என்பதால், அந்த அன்னையைக் களங்கப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது என்று எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவை மீது, தீயோன் சுமத்தி வரும் மிகப்பெரும் குற்றச்சாட்டுக்கள், திருஅவை மீது அவன் மேற்கொள்ளும் சித்திரவதைகளுக்கு ஒப்பானவை என்று வலியுறுத்திக் கூறினார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## திருத்தந்தையுடனும் ஆயர்களுடனும் இணைந்துள்ளோம்



ஆயர் மாமன்ற பரிந்துரைகளின் தொகுப்பு குறித்த சிந்தனைகள் இடம்பெற்றுவரும் வேளையில், கடந்த வெள்ளியன்று மாலை அமர்வில், திருத்தந்தையுடன் கலந்துகொண்ட இளையோர் திருத்தந்தைக்கென உருவாக்கப்பட்ட ஒரு பாடலைப் பாட, அதற்கு ஆயர் மாமன்ற பொதுச் செயலாளர், கர்தினால் லொரென்ஸோ பால்திஸ்ஸேரி அவர்கள் பியானோ இசைக்கருவியை வாசிக்க, இவ்வமர்வு கோலாகலமாக தொடக்கி வைக்கப்பட்டது. இந்த அமர்வின் முக்கிய பகுதியாக, ஆயர் மாமன்ற இளையோர் பிரதிநிதிகள் அனைவரும் வெவ்வேறு நிறங்களில் கையெழுத்திட்டு, "நாங்கள் எப்போதும் திருத்தந்தையோடும், திருஅவை ஆயர்களோடும் இணைந்திருப்போம்" என எழுதி, அம்மடலை திருத்தந்தைக்கு வழங்கினர். மேலும் இவ் அமர்வின் போது ஆயர் மாமன்ற உறுப்பினர்களாக 16 ஆயர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 4 பிரதிநிதிகளை திருத்தந்தை நியமிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்து விடுவார். (எசாயா 25: 08)**